உ

தேவிசகாயம்.

# ANUBOGAVYTHIA

## BRAMAH RAHASIAM.

# அனுபோகவயித்திய

## பிரம்மரகசியம்.

ஆறும்பாகம்.

இஃது,

ஜெகந்நாதஸ்தலம்

## கோஷாயிசுவாமிகள்

அனுக்கிரகத்தின்படி

பூவிருந்தவல்லி,

சுந்தரமுதலியார் குமாரர்

பூ. சு. குப்புசாமி முதலியாரது

ஸ்ரீசுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை-புரசை.

1914.

Registered Copyright.

உ

கடவுள் துணை.

# முகவுரை.

இந்த அனுபோகவயித்திய பிரம்மரகசியமென்னும் நூலானது வெளிவந்தகாரணமும், இதனுள் அடங்கிய விஷயங்களுக்கும், இங்ஙனம் முகவுரையெனப் பெயர்வகித்து சுருக்கமாக எழுதி முடிக்கப்பட்டிருக்கிறது.

ஜெகந்நாதஸ்தலம் ஸ்ரீமான் கோஷாயி சுவாமிகளால் நெடுவருடங்களாக காசிமுதலான திவ்வியக்ஷேத்திர யாத்திரைவாசிகளுக்கு தருமத்திற்கு உபயோகித்துவந்த சத்தியமான உத்தமமுறைகள் யாவையும், இன்னும் சிலகைமுறைகளையும்சேர்த்து இந்நூலுக்கு போதுமானபொருளைச் சிலவிட்டு அச்சிடுவித்தவராகிய ம-ா-ா-ஸ்ரீ, பூ. சு. குப்புசாமிமுதலியார், அனுமதியின்றி இந்நூலை பிறர் எவ்விதத்தும் அச்சிடாதபடிக்கு (கெவர்மென்ட் சட்டப்படி) ரிஜிஸ்டர் காப்பிரயிட் செய்திருக்கிறது.

{ அனுபோகவயித்திய பிரம்மரகசியம் 8 - காண்டங்களும் தயாராயிருக்கிறது. }

| | | | |
|---|---|---|---|
| காண்டம் 1-க்கு விலை அ௵ | 0 | 8 | 0 |
| ஷை 4-காண்டமும் ஒரேகட்டடம் | 1 | 8 | 0 |
| ஷை 8-காண்டமும் ஒரேகட்டடம் | 3 | 0 | 0 |

**V.P.** போஸ்ட்சார்ஜி பிரத்தியேகம்.

10 - புத்தகம் மொத்தமாய்வாங்கினால் 1 - புத்தகம் கமிஷன் கொடுக்கப்படும்.

ரிப்ளேகார்ட்டெழுதினால் பதில்சங்கதிகிடைக்கும்.

பூ. சு. குப்புசாமிமுதலியார்.
ஸ்ரீசுந்தரவிலாசம்பிரஸ், பிரம்பூர் பாறக்ஸ்போஸ்ட் மதராஸ்.

உ

பறவந்தர் துணை

## பஞ்சபூத ரகசியமென்னும்

# பஞ்சபக்ஷி ரத்தினம்.

**கல்வியில்மிகுந்த கனதனவான்களே:—**

நம்முன்னோர்களாகிய மகன்னியர்களும் 18-சித்தர்களும் ஜீவர்கள்மேல் கருணைவைத்து உலோகோபகாரமாய் எழுதிவைத்த அளவிறந்தசாஸ்திரங்களில் அதிக அருமையானசாஸ்திரம் பக்ஷிசாஸ்திரமேயாம். இச்சாஸ்திரமானது அதிக சிலாக்கியப்பட்டதென்பதை "பல்லிசொல்பவனோடு பதில் பேசாதே, பஞ்சபக்ஷிக்காரனைப் பகைக்காதே, சரங்கற்றவனோடு சகவாசம்பண்ணாதே" என்னும் பழையமொழியேவிளக்குகின்றது தற்காலம் அகஸ்தியர், போகர், ரோமரிஷி முதலியோர் எழுதியதாக பஞ்சபக்ஷிசாஸ்திரங்கள் வெளிவந்திருந்தாலும் ஷெ சாஸ்திரமானது இதுவரையும் முற்றுமே வெளிவந்ததில்லையென்பது அனேகருக்குத் தெரியும் அதுவுமல்லாமல் தற்காலம் வெளிவந்துலாவும்நூல்களில் ஒன்றிலாவது பக்ஷிதொழில் நடை என்பது உண்மையாயெழுதியிருக்கவில்லை இச்சாஸ்திரமானது வைத்தியர் ஜோசியர்மாந்திரீகர் முதலியோருக்கும் மற்றுமுள்ள சகல குடும்பத்தாருக்கும் அவசியந் தேவையானது. இந்நூல்ஆசிரியர் இல்லாமலேயே பாலர்முதல் அனைவரும் அதிகஎளிதில் தெரிந்துகொள்ளும்படியாகவும், வரிசைக்கிறமமாகவும், அனேக அதிகாரங்களாகவும், மூலமும் உரையுமாக எளிய செந்தமிழில் எழுதியுள்ளது. நினைக்கும்காரியங்களை முடிப்பதற்கும் பிணிகளை இலேசாகநீக்கவும் வாழ்நாள்விவரத்தைத் தெரிந்துக்கொள்ளவும், பகைவரைவெல்லவும், பிறர்க்குநடந்தவிஷயங்களையும், நடக்கப்போகும்விஷயங்களையும் திரிகாலஞானம்போல் சொல்லவும் மனிதன் முக்கியமாய்அடையவேண்டிய ஞானமார்க்கத்தை இலேசில்பெறவும் இந்நூலே சிலாக்கியப்பட்டது. ஆகலால் உண்மையாகவும் தொழில் நடைகள் சரியாகவும்அமைந்துள்ள பக்ஷிசாஸ்திரம் இதுஒன்றுதான். இது கிளேஸ்கடிதத்தில் அச்சிட்டு இங்கிலீஷ்பயிண்டுசெய்துள்ளது.

இதன்விலை அணா 12

உ

தேவிசகாயம்.

# அவுஷதங்களின் அகராதி.


| அவுஷதங்கள். | பக்கம். | அவுஷதங்கள். | பக்கம். |
|---|---|---|---|
| கண்டகரசமாத்திரை | 9 | சுவர்ணமாத்திரை | 22 |
| மகாபயிரவமாத்திரை | 10 | அப்பிரகமாத்திரை | 0 |
| ரக்ஷாமணிமாத்திரை | 0 | கோரோஜனைமாத்திரை | 23 |
| மேகரார்ஜாங்கமாத்திரை | 11 | கஸ்தூரிமாத்திரை | 0 |
| குலாந்தகமாத்திரை | 0 | லிங்கமாத்திரை | 24 |
| சூடாமணிமாத்திரை | 12 | லிங்கபேதிமாத்திரை | 0 |
| கஜகேசரிமாத்திரை | 0 | கர்ப்பூரமாத்திரை | 0 |
| சந்திரோதயகுளிகை | 13 | தாளகமாத்திரை | 25 |
| அர்த்தநாரீஸ்வரக்குளிகை | 0 | லிங்கமாத்திரை | 0 |
| பயிரவமாத்திரை | 14 | மனோசிலைமாத்திரை | 0 |
| சங்குவடிமாத்திரை | 0 | பாஷாணமாத்திரை | 26 |
| காலாக்கினிமாத்திரை | 15 | சுரகுடாரிமாத்திரை | 0 |
| பிரகாசமாத்திரை | 0 | கட்டுவாங்கமாத்திரை | 0 |
| பயிரவமாத்திரை | 16 | பேதிமாத்திரை | 27 |
| சூர்யரசாயனமாத்திரை | 0 | சுரஹரமாத்திரை | 0 |
| பயிரவமாத்திரை | 17 | பாலசஞ்சீவிமாத்திரை | 0 |
| பூபதிமாத்திரை | 0 | பாலசுரமாத்திரை | 28 |
| அற்புதமாத்திரை | 0 | விநோதசஞ்சீவிமாத்திரை | 0 |
| பஞ்சபாணமாத்திரை | 18 | பேதிமாத்திரை | 0 |
| போஜனகுடாரிமாத்திரை | 0 | பாலசுரஹரமாத்திரை | 29 |
| ரோகநிவாரணமாத்திரை | 0 | ஆசிர்சஷவிஷஹரமாத்தி | 0 |
| சுவர்ணமாத்திரை | 19 | உதயாதித்தியமாத்திரை | 0 |
| ராஜமாத்திரை | [illegible] | | |
| அஜமோதாஷ்டகமாத்தி | 20 | | |
| இரசமாத்திரை | 0 | | |
| சித்தானந்தபயிரவமாத்தி | 0 | | |
| வேதாந்தபயிரவமாத்திரை | 21 | | |
| ராக்ஷசமாத்திரை | 0 | | |
| சங்குவடிமாத்திரை | 0 | | |


சூரண வகைபரணி.


| | |
|---|---|
| ஆனந்தவினோதச்சூரணம் | 31 |
| லவணச்சூரணம் | 0 |
| கலிங்காதிச்சூரணம் | 32 |
| இராஜகேசரிச்சூரணம் | 0 |

| அவுஷதங்கள். | பக்கம். |
|---|---|
| சாமுதரச்சூரணம் | 32 |
| அமிர்தவல்லிச்சூரணம் | 33 |
| குன்மகுடாரிச்சூரணம் | 0 |
| அமிர்தசஞ்சீவிச்சூரணம் | 34 |
| ராஜஏலாதிச்சூரணம் | 0 |
| தாளிசபத்திரிச்சூரணம் | 0 |
| மஹா அசுவகந்திச்சூரணம் | 35 |
| திரிநேத்திரச்சூரணம் | 0 |
| மகாதாதுளைச்சூரணம் | 36 |
| லகுதாதுளைச்சூரணம் | 0 |
| சொர்ணனந்தச்சூரணம் | 0 |
| பயிரவச்சூரணம் | 37 |
| சண்முகச்சூரணம் | 0 |
| அக்கினிச்சூரணம் | 0 |
| ராஜவைணச்சூரணம் | 38 |
| லவணச்சூரணம் | 0 |
| பஞ்சமுகச்சூரணம் | 0 |
| கட்டுவாதிச்சூரணம் | 39 |
| பித்தராஜாங்கச்சூரணம் | 0 |
| பறங்கிப்பட்டைச்சூரணம் | 0 |
| திப்பிலிச்சூரணம் | 40 |
| பலகாரிச்சூரணம் | 0 |
| பித்தஹரச்சூரணம் | 0 |
| இஞ்சிச்சூரணம் | 0 |
| தாதுபுஷ்டிச்சூரணம் | 41 |


## லேகியவகைபரணி.


| அவுஷதங்கள். | பக்கம். |
|---|---|
| ராஜமார்த்தாண்டலேகியம் | 42 |
| வில்வாதிலேகியம் | 0 |
| கூழ்பாண்டலேகியம் | 43 |
| ராஜசிந்தாதிலேகியம் | 0 |
| தாதுளைலேகியம் | 44 |
| அமிர்தசஞ்சிவிலேகியம் | 0 |
| தக்ஷிணாமூர்த்திலேகியம் | 45 |
| வச்சிரவல்லிலேகியம் | 46 |
| அருணாசலலேகியம் | 0 |
| தாதுபுஷ்டிலேகியம் | 0 |
| கந்தகலேகியம் | 47 |
| பூர்ணாதிலேகியம் | 0 |
| பூர்ணசந்திரோதயலேகிய | 48 |
| கதலிலேகியம் | 0 |
| கண்டத்திப்பிலிலேகியம் | 49 |
| இஞ்சிலேகியம் | 0 |


## கிருதவகைபரணி.


| அவுஷதங்கள். | பக்கம். |
|---|---|
| மாணிக்ககிருதம் | 50 |
| புளியாரைக்கிருதம் | 0 |
| கூழ்ப்பாண்டகிருதம் | 51 |
| திரிலோககிருதம் | 0 |
| வல்லாரைகிருதம் | 52 |
| தாதுளைகிருதம் | 0 |
| மரத்துவெள்ளை நவநீதம் | 53 |
| பேர்ச்சங்காய்கிருதம் | 54 |
| பொன்னாங்காணிகிருதம் | 0 |
| புளியாரைகிருதம் | 0 |


## பஸ்மவகைப்ரணி.


| அவுஷதங்கள். | பக்கம். |
|---|---|
| ரசதபஸ்மம் | 56 |
| தாம்பிரபஸ்மம் | 0 |
| வங்கபஸ்மம் | 57 |
| கருவங்கபஸ்மம் | 58 |
| ரசபஸ்மம் | 0 |
| வேறுரசபஸ்மம் | 59 |
| கெந்தகபஸ்மம் | 0 |
| வீரபஸ்மம் | 60 |
| தாளகபஸ்மம் | 61 |

| அவுஷதங்கள். | பக்கம். |
|---|---|
| துருசுபஸ்மம் | 61 |
| தாம்பிரபஸ்மம் | 62 |
| வெள்ளிபஸ்மசெந்தூரம் | 0 |
| பவளபஸ்மம் | 63 |
| நாகபஸ்மம் | 64 |
| கெருடபஸ்மம் | 0 |
| வெள்வங்கபஸ்மம் | 65 |
| கருவங்கபஸ்மம் | 0 |
| கர்ப்பூரசிலாசத்துபஸ்மம் | 66 |
| சொர்னபஸ்மம் | 0 |
| முத்துப்பஸ்மம் | 67 |
| அயபஸ்மம் செந்தூரம் | 0 |
| சிங்கிபஸ்மம் | 0 |
| கல்நார்பஸ்மம் | 68 |
| பஞ்சலவணபஸ்மம் | 0 |

**கண்டாவிழ்தபரணி.**

| அவுஷதங்கள். | பக்கம். |
|---|---|
| வியாதிகட்கு மூலிகைப் பிரயோகம் 157-விதமுறைகள் | 69 |


## அவுஷிதங்களின் அகராதி

### முற்றிற்று.

உ

கடவுள் துணை.

200 - புத்தகங்களடங்கிய பலபாட்டு

# சில்லரைக்கோர்வை.

பலபாட்டுச் சில்லரைக்கோர்வைஎன்னும்புத்தகமானது டிம்மி பதினாறுபேஜ் அளவில் பெரியபுத்தகமாக திக்குகடிதத்தில் சுமார் 50 60-வருடங்களுக்குமுன்னிருந்த பழையவித்வான்களால் பாடிய பாட்டுகள்முதல் தற்காலத்து வித்வான்கள்பாடியவரையில் எல்லாக்கவிராயர்களுடையபாட்டுகளும் அநேகபதிகங்களும் தோத்திரங்களும் கும்மிகளும் சிந்துகளும் ஜாவளிகளும் ஏசல்களும் ஓடம் முதலான சகலமான பாட்டுகளும் ஒரே கோர்வையாய் உயர்ந்த திக்குகடிதத்தில் அச்சிட்டு கலிகோபயிண்டுசெய்திருக்கின்றது. இந்தப்புஸ்தகங்களைத் தனித்தனியாக வாங்கினால் சுமார் 3-ரூபாய்க்கு மேலாகும்ஒரேகட்டடமாய்அச்சிட்டிருக்கிறபடியால்வாங்குபவர்களுக்கு சகாயமாய் அறைவிலைக்கு கொடுக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| திக்குகடிதம் கலிகோபயிண்டு விலை | 1 | 8 | 0 |
| ஷை தோல்பயிண்டு விலை | 1 | 12 | 0 |

இப்படிக்கு,

**பூ. சு. குப்புசாமிமுதலியார்.**

ஸ்ரீசுந்தரவிலாசம்பிரஸ்,

பிரம்பூர்பாறக்ஸ்போஸ்ட், மதராஸ்.

உ

தேவிசகாயம்.

# அனுபோகவயித்திய
## பிரம்மரகசியம்.
# ஆறுவதுகாண்டம்.

### விநாயகர்துதி.

அகரமென வறிவாகி யுலகமெங்கு
மமர்ந்தகர வுகரமகரங்க டம்மாற்
பகருமொரு முதலாகி வேறுமாகிப்
பல்வேறு திருமேனி தரித்துக்கொண்டு
புகரில்பொரு ளுண்கிணையு மிடர்தீர்ந்தெய்தப்
போற்றுநறுக் கருட்கருணை புரிந்தல்லார்க்கு
நிகரின்மறக் கருணைபுரிந் தாண்டுகொள்ளு
நிருமலனைக் கணபதியை நினைந்துவாழ்வாம்.

### கண்டக ரசமாத்திரை.

| | | | |
|---|---|---|---|
| சுத்திசெய்த ரசம் | பலம்-1 | சுத்திசெய்த கந்தகம் | பலம்-1 |
| ,, வசநாவி | ,, 1 | மிளகு | ,, 3 |

இவைகளைக்கல்வத்திலிட்டு கண்டங்கத்திரிப் பழச்சாற்றுலரைத்து உலர்த்தவும். இவ்விதமாக ஷை சாற்றால் 2-தடவைஅரைத்துஉலர்த்தி 3 - குன்றிமணிஅளவாக மாத்திரைகளாக்கி ஒருமாத்திரைவீதம் கொடுத்துவர அஜீர்ணரோகங்கள் (6) பேதி இவைகள் அதிசீக்கிரத்தில் குணமாகும்.

## மகாபயிரவமாத்திரை.

| | | | |
|---|---|---|---|
| சுத்திசெய்த | மனேசிலை | விராகனிடை | 5 |
| ,, | கல்நார் | ,, | 5 |
| ,, | தாளகம் | ,, | 5 |
| ,, | பூரம் | ,, | 5 |
| அக்கிராகாரம் | | ,, | 5 |

இவைகளைச்சேர்த்து கல்வத்திலிட்டுக் கொடிக்கள்ளிப் பாலால் 3-ஜாமம்அரைத்து உலர்த்தி ஒருகுகையில் போட்டு மூடி 9-சீலைமண்செய்து குக்குடபுடம்போட்டு எடுத்து பசும் பால், கொடிக்கள்ளிப்பால், எலுமிச்சம்பழச்சாறு, கற்ருழை ச்சாறு, கரிப்பான்சாறு இவைகளில் முறையே ஒவ்வொரு ஜாமமரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரைவீதம் சர்க்கரையில் தினம் காலை மாலை ஒருமண்டலம்கொடுக்க மூலமுளை அற்றுப்போகும் மூலரோகம் (8) ம் குணமாகும்.

## ரக்ஷாமணிமாத்திரை.

| | | | |
|---|---|---|---|
| சுத்திசெய்த | லிங்கம் | பலம் | 2 |
| ,, | தாளகம் | ,, | 2 |
| ,, | மனேசிலை | ,, | 2 |
| ,, | வெங்காரம் | ,, | 2 |
| ,, | கருநாபி | ,, | 2 |
| சுக்கு | | ,, | 2 |
| மிளகு | | ,, | 2 |
| திப்பிலி | | ,, | 2 |

இவைகளைச்சேர்த்து கல்வத்திலிட்டு இஞ்சிச் சாற்றால் 4-ஜாமமரைத்து குன்றிமணிஅளவாக மாத்திரைகளாக்கிஉலர்த்தி தினம் 2-தடவை ஒருமாத்திரைவீதம் சித்தரத்தைச் சாறு, இஞ்சிச்சாறு, முலைப்பால் இவைகளில் எதிலாகிலும் கொடுக்க க்ஷயம்(4)சுவாசம்(5)காசம்(5)சுளை, மந்தாரகாசம், சுரம் (64) முதலிய கடூரரோகங்கள் குணமாகும்.

## மேகராஜாங்கமாத்திரை.

| | | | |
|---|---|---|---|
| சுத்திசெய்த | ரசம் | பலம் | 2 |
| ,, | அரிதாரம் | ,, | 2 |
| ,, | மனோசிலை | ,, | 2 |
| தேற்றான்விதை | | ,, | 2 |
| வெள்ளைக்குங்கிலியம் | | ,, | 2 |
| விளாம்பிசின் | | ,, | 2 |

இவைகளைச்சேர்த்து சூரணித்து ஒருதுணியில் போட்டுமுடித்து பச்சரிசிக்கழுநீரில் 3-நாள்ஊறவைத்தெடுத்துகல்வத்தில்போட்டு காடியைவிட்டு ஒருசாமமரைத்து உளுந்தளவாக மாத்திரைகளாக்கி தினம் 1--2-மாத்திரை காலை மாலை மோரிலாவது தேனிலாவது 43-நாள்கொடுக்க மேகம்(21)ம், நீர்முள்ளிவிதை, முள்ளிவிதை முதலிய அனுபானத்திலிட பிரமேகம் (21) ம், மேகஊரல், மேகத்தடிப்பு, மேககாங்கை, மேகரணம் முதலிய மேகசம்பந்தமான சகல ரோகங்களும் குணமாகும்.

## குலாந்தக மாத்திரை.

| | | | |
|---|---|---|---|
| சுத்திசெய்த | அப்பிரேகப்பொடி | பலம் | 3 |
| ,, | காரீயம் | ,, | 1 |
| ,, | வெள்ளீயம் | ,, | 1 |

இவைகளைச்சேர்த்து உருக்கிஎடுத்து அதற்கு(வ)பங்கு சுத்திசெய்தரசமும், ரசத்துக்கு இரட்டிப்பு கந்தகமும்சேர்த்து தைவேளைச்சாற்றால் ஒருஜாமம்அரைத்துஉலர்த்திகாசிகுப்பியில்போட்டு வாய்மூடி 9-சீலைமண்செய்து ஒரு சட்டியில் 3-விரற்கடை மணலைக்கொட்டி அதின்மேல் குப்பியைவைத்து பிரகு மணலால்மூடி ஒருஜாமம் கமலாக்கினியாய் எரித்துஎடுத்து அதற்குச்சமமாய் கந்தகத்தைச் சேர்த்து கரிசாலைச்சாற்றால் ஒருஜாமம்அரைத்து பில்லைதட்டி வரராகல்புடம்போட்டு சிவக்காவிட்டால் அதை சிவப்பாகிறவரையில் கந்தகத்தைச்சேர்த்து ஷை சாற்றாலரைத்து ஷை புடம்போடவும், சிவந்தபிறகு அதற்குபாதியிடை கட்டின லிங்கத்தைச் சேர்த்து முலைப்பாலால்அரைத்து சிறுபயறு அளவாக மாத்

திரைகளாக்கி ஒருமாத்திரைவீதம் தினம் 2-தடவை கொடுக்க பிரமேகம் (21) நீரிழிவு, பிரமியம் (20) மேகஊறல், மேகம் (26) ங் குணமாகும்.

## சூடாமணிமாத்திரை.

| | | | |
|---|---|---|---|
| சுத்திசெய்த | கெவுரிபாஷாணம் | விராகனிடை | 7 |
| ,, | ரசகற்பூரம் | ,, | 7 |
| ,, | கஞ்சா | ,, | 7 |
| கோரைக்கிழங்கு | | ,, | 7 |
| வெடியுப்பு | | ,, | 7 |
| கர்க்கடகசிங்கி | | ,, | 7 |
| அதிமதுரம் | | ,, | 7 |
| அக்கிராகாரம் | | ,, | 7 |

இவைகளைச்சேர்த்து எலுமிச்சம்பழச் சாற்றால் ஒருஜாமமும், இஞ்சிச்சாற்றால் 4-ஜாமமும், முலைப்பாலால் 2-ஜாமமும், அரைத்து சிறுபயறுஅளவாக மாத்திரைகளாக்கி உலர்த்தி ½-முதல் 1-மாத்திரைதேனிலிட ஜன்னி(13)விஷஜன்னிதோஷம் வாதம்(80)முதலிய சகல கடூரரோகங்கள் தீரும்.

## கஜகேசரிமாத்திரை.

| | | | |
|---|---|---|---|
| சுத்திசெய்த | கெந்தகம் | பலம் | 2 |
| ,, | ரசம் | ,, | 1 |

இவ்விரண்டும் கல்வத்திலிட்டு ஒருஜாமம் அரைத்து 3-பலம் சுத்திசெய்த தாம்பிரத்தால் குடுக்கைசெய்து அதில் நிரப்பி குடுக்கின்வாயை தாம்பிரத்தால்மூடி 1-கலயத்தில்பாதிக்குஉப்பைக்கொட்டி அதின்மேல் இந்த குடுக்கைவைத்து அதில் உப்பைநிரையப்போட்டு மேல்கலயம்மூடி ஏழு சீலைமண் வலுவாய்செய்து கஜபுடம்போட்டு எடுத்து சூரணித்து வெற்றிலைச்சாற்றால்அரைத்து மாத்திரைகளாக்கி 1-2-குன்றிமணியிடைவீதம்கொடுத்து உடனே சுக்கு காயம் விளகு திப்பிலி வசம்பு இவைகளின்சூரணத்தில் 1-விராகனிடை ஜலத்தில் கரைத்துக்கொடுக்க மஹா உபத்திரவத்தை தருகின்ற சகல சூலைரோகங்கள் அதிசீக்கிறத்தில்குணமாகும்.

## சந்திரோதய குளிகை.

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த வெள்ளைப்பாஷாணம் | பலம் | 1 |
| ,, ரசம் | ,, | 1 |

இவ்விரண்டுங் கல்வத்திலிட்டு கொடிவேலிவேர் கஷாயத்தால் 5-ஜாமம் அரைத்து பில்லைதட்டிஉலர்த்தி வச்சிரக்குகையில்போட்டு வாய்மூடி 9-சீலைமண்செய்து உலர்ந்த தரையில் ஒருகுழியாக்கி அதில்பாதி மணலைப்போட்டு குகையை வைத்து மணலால் குழியைமூடி அதின்மேல் வராகபுடம் போட்டுஎடுத்து அத்துடன் கால்பங்கு சுத்திசெய்த கருநாவியும் சுக்கு மிளகு திப்பிலி வகைக்கு 2-பலஞ்சேர்த்து நொருஞ்சி சின்னியிலை முள்ளியிலை இவைகளின் சாற்றால் தனித்தனியே ஒருஜாமம்அரைத்து சிறுபயறு அளவாக மாத்திரைகளாக்கி நிழலில்உலர்த்தி ஒருமாத்திரை அனுபானத்திலிட சன்னிபாதசுரம்(13) விஷசுரம் தோஷம் வாதம்(80)முதலிய கடூரரோகங்கள் குணமாகும்.

## அர்த்தநாரீஸ்வரக்குளிகை.

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த தாளகம் | விராகனிடை | 10 |
| ,, நேர்வாளப்பருப்பு | ,, | 10 |
| காவிக்கல் | ,, | 10 |

இவைகளைச்சேர்த்து கல்வத்திலிட்டு கவுதும்பை, நல்லதும்பை, பெருந்தும்பை இவைகளின்சாற்றால் வகைக்கு ஒருஜாமம் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி ஒருமாத்திரை குளிர்சுரத்துக்கு மோரைமூரித்தத் தண்ணீரிலும், அதிசாரசுரத்துக்கு சுக்குக் கஷாயத்திலும், பழயசுரத்துக்கு பேய்ப்புடலிலும், சுக்குசேர்ந்தகஷாயத்திலும், சிலேஷ்மசுரத்துக்கும் இருமலுக்கும் தேன்கலந்த திப்பிலித்தூளிலும், தாபசுரத்துக்கு வில்வவேரும் சுக்கும்சேர்ந்த கஷாயத்திலும், அஸ்திசுரத்துக்கு பசும்நெய்யிலும், வாதசுரத்துக்கு வாதமடக்கிக்கஷாயத்திலும், கொடுக்ககுணமாகும் பத்தியம் புளி உப்பு தள்ளவும், பேதிஅதிகமானால் மா ஆல் இலுப்பை இவைகளின்கொழுந்தை ஜலத்திலிட்டுக் காய்ச்சிக்கொடுக்க பேதிநிற்கும்.

## பயிரவமாத்திரை.

சாபத்திரி கிராம்பு
சன்னலவங்கப்பட்டை சுக்கு
அக்கிராகாரம் கட்டினலிங்கம்
திப்பிலி சுத்தித்தகருநாவி

இவைகளைச் சமமாகச்சேர்த்து கல்வத்திலிட்டு வெற்றிலைச்சாறு இஞ்சிச்சாறு இவைகளால் வகைக்கு ஒருஜாமம்அரைத்து குன்றிமணிஅளவாக மாத்திரைகளாக்கி ஒருமாத்திரைவீதம் அனுபானத்திலிட இருமல் வாயு அதிசாரம் குன்மம் முதலியவைகள் குணமாகும்.

## சங்குவடிமாத்திரை.

திருகுகள்ளி வாழை
எருக்கன் ஆமணக்கு
புளி புரசன்
நாயுருவி

இவைகளின்சமூலத்தை தனித்தனிஉலர்த்திஎரித்து சாம்பலாக்கி ஜலத்தில்கரைத்துவடித்துஎரிக்க உப்பைக்கட்டும் அந்தஉப்புகள் வகைக்குப்பலம்-4, கல்லுப்பு, இந்துப்பு, சவுட்டுப்பு, வளயலுப்பு, வெடியுப்பு, வகைக்குப் பலம்-4, எவாக்ஷாரம், வெங்காரம், சத்திசாரம், சவுக்காரம், வகைக்குப் பலம்-கவ, இவைகளை 4-பலம் வெள்ளைசங்குத்துண்டுகளை நெருப்பில்காய்ச்சி 8-சேர் எலுமிச்சம்பழச்சாற்றில் தேய்த்து இவ்விதமாய் சங்குத்துண்டுகள் பஸ்மமாகிக் கரைந்துவிடும் வரையில் காய்ச்சித்தேய்த்து, அதில் ஏழுஉப்புகளை எல்லாம் சேர்த்து அத்துடன் சுக்கு பலம்-12, மிளகுபலம்-8, திப்பிலி பலம்-4, வறுத்த பெருங்காயம், கண்டத்திப்பிலி, சித்திரமூலம், ஓமம், சீரகம், சாதிக்காய், கிராம்பு, வகைக்குப் பலம்-2, ரசம், கந்தகம், கருநாவி, வெங்காரம், மனோசிலை, வகைக்குப் பலம்-1, இவைகளில் சுத்திசெய்யவேண்டியவைகளைச் சுத்திசெய்து சூரணித்துச்சேர்த்து அரைத்து பிறகு புளியாரைச் சாறு சேர்-2, விட்டுஅரைத்து உளுந்து அளவாக மாத்திரைக

ளாக்கி தினம்-2-தடவை ஒருமாத்திரைவீதம் கொடுக்க அஜீர்ணம் குன்மம் அக்கினிமந்தம் மகோதரம் உதர ரோகங்கள் குணமாகும்.

## காலாக்கினிமாத்திரை.

| | | | |
|---|---|---|---|
| ரசபஸ்பம் | | விராகனிடை | 9 |
| கால்மல் | | ,, | 9 |
| சுத்திசெய்த | வெங்காரம் | ,, | 9 |
| ,, | மனோசிலை | ,, | 9 |
| ,, | அரிதாரம் | ,, | 9 |
| ,, | நேர்வாளப்பருப்பு | ,, | 9 |
| பெருங்காயம் | | ,, | 9 |
| கடுகு | | ,, | 9 |
| இந்துப்பு | | ,, | 9 |
| திப்பிலி | | ,, | 9 |
| கருஞ்சீரகம் | | ,, | 9 |

இவைகளைச்சேர்த்து கல்வத்தில் போட்டு எலுமிச்சம்பழச்சாற்றால் 2-ஜாமம்அரைத்து மிளகு அளவாக மாத்திரைகளாக்கி ஒருமாத்திரைவீதம் சுக்குக் கியாழத்திற் கொடுக்க சுரம் 64 - ம், சுக்கு மிளகு கியாழத்திற் கொடுக்க குளிர்சுரமும், வெள்ளைவங்காயச்சாற்றிலகொடுக்க பாண்டு மகோதரம் சோகையும், இஞ்சிச்சாற்றில்கொடுக்க ஜன்னி 13 ம் கடுக்காய்கியாழத்திற்கொடுக்க இருமலும், எருமை நெய்யிற்கொடுக்க ரத்தமூலமும்தீரும்.

## பிரகாச மாத்திரை.

| | |
|---|---|
| ரசபஸ்மம் | சுக்கு |
| ரசச்செந்தூரம் | கடுகுரோகணி |
| வெங்காரம் | குரோசாணிஓமம் |
| லிங்கம் | கோஷ்டம் |

வகைக்குப்பலம்-1, நேர்வாளப்பருப்புபலம்-16, இவைகளை சுத்திசெய்து கல்வத்திலிட்டு விளாய்பிசின் ஜலத்தால் அரைத்து குன்றிமணிஅளவாக மாத்திரைகளாக்கி 1-2-மாத்திரைக்கொடுக்க வாத பித்த சிலேஷ்ம ரோகங்களைக் கண்டித்து செவ்வையாய் பேதியாகும். பேதி அதிகமானல் புளித்தமோ

ரும் அன்னமும் சாப்பிடவும். அன்றியும் சுரம் (64) சன்னி (10) வாதம் (10) பித்தம் (40) கபசம்பந்தமான ரோகங்கள் முதலிய அனேக கடீரரோகங்களுக்கு குறைந்த அளவில்கொடுக்க ரோகங்கள் குணமாகும்.

## பயிரவமாத்திரை.

| | | | |
|---|---|---|---|
| சுத்திசெய்த | கருநாவி | விராகனிடை | 9 |
| ,, | லிங்கம் | ,, | 9 |
| ,, | அரிதாரம் | ,, | 9 |
| ,, | ரசகற்பூரம் | ,, | 9 |
| ,, | கந்தகம் | ,, | 9 |
| ,, | நேர்வாளப்பருப்பு | | 9 |

இவைகளை கல்வத்திலிட்டு சூரணித்து அத்துடன் ரசபஸ்மம், ரசசெந்தூரம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தானிக்கரய், நெல்லிமுள்ளி, கிராம்பு, ஏலம், சாதிப்பத்திரி, வகைக்கு பலம்-1, சேர்த்து முலைப்பாலால் 2-ஜாமமும், வேப்பங்கொட்டை, கற்றாழை, கொன்றைப்பூ இவைகளின் சாற்றால் முறையே 3-ஜாமம்அரைத்து உளுந்துஅளவாக மாத்திரைகளாக்கி ஒருமாத்திரை முலைப்பாலிலாவது, தேனிலாவது கொடுக்கச் சந்நிபாதசுரம் (13) சுரம் (64) தோஷம் வாதம்(60) பித்தம் (40) சிலேஷ்மம் (20) முதலிய அநேக பலமான ரோகங்கள் குணமாகும்.

## சூர்யரசாயனமாத்திரை.

| | | | |
|---|---|---|---|
| சுத்திசெய்த | ரசம் | பலம் | 1 |
| ,, | கந்தகம் | ,, | $\frac{1}{2}$ |

இவ்விரண்டும் கற்றாழைச்சாற்றால் 1-ஜாமம்அரைத்து $1\frac{1}{2}$-பலம் சுத்திசெய்த தாம்பிரத் தகடுகளுக்கு கவசமிட்டு ஓட்டில்வைத்து மேல்ஓட்டால்மூடி சீலைமண் வலுவாகச் செய்து காடாக்கினியாய் 1-நாள்எரித்து எடுத்து சூரணித்து அத்துடன் சுக்குத்தூளும் பெருங்காயமும் வகைக்குவிராகனிடை-2, சேர்த்து மாத்திரைகளாக்கி 2-குன்றிமணியிடை கொடுக்க சுவாசம் (5) ங் குணமாகும்.

## பயிரவமாத்திரை.

| | |
|---|---|
| மனோசிலை | கருநாவி |
| ரசம் | லிங்கம் |
| கந்தகம் | வெங்காரம் |

இவைகளைச்சுத்திசெய்து வகைக்குப்பலம்-1, வீதமெடுத்து கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாற்ருல் ஒருஜாமமரைத்து உளுந்தளவாகமாத்திரைகளாக்கி ஒருமாத்திரை முலைப்பாலில்கொடுக்க சந்நிபாதம்(13) சுரம் (64) வாதம் (80) கபரோகங்கள்முதலியபலமானரோகங்கள் குணமாகும்.

## பூபதிமாத்திரை.

| | | | |
|---|---|---|---|
| சுத்திசெய்த | மனோசிலை | விராகனிடை | 2 |
| ,, | தாளகம் | ,, | 2 |
| ,, | லிங்கம் | ,, | 2 |

இவைகளுடன் கறிக்கரணை அல்லது காட்டுக்கருணைக்கிழங்கைநோண்டி அதில்வைத்துமூடி சீலைமண்செய்து உலர்த்தி 2-படி உமிக்குள்வைத்து புடம்போட்டு எடுத்து வேலிப்பருத்திச்சாற்ருல் 8-ஜாமம்அரைத்து சிறுபயறுஅளவாக மாத்திரைகளாக்கி ஒருமாத்திரைவீதம் கொடுத்துவரசுரம்-64, வாதம்-80, கபரோகங்கள் குணமாகும். பத்தியம் புளி உப்பு தள்ளவும்.

## அற்புதமாத்திரை.

| | |
|---|---|
| சீரகம் | வெள்ளைப்பூண்டு |
| மிளகு | பெருங்காயம் |
| சுக்கு | இந்துப்பு |
| திப்பிலி | சுத்திசெய்தகெந்தகம் |

இவைகள் வகைக்குப்பலம்-2, கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாற்ருல் 4-ஜாமம்அரைத்து சுண்டக்காய் அளவாக மாத்திரைகளாக்கி தினம் 2-தடவை ஒரு மாத்திரைவீதம்சாப்பிட்டுவர அக்கினிமந்தம் பித்தவாயு சூதகவாயு உஷ்ணவாயு கிரகணி குன்மம் உதரரோகம் வாந்திபேதிகுணமாகும்.

## பஞ்சபாணமாத்திரை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெருங்காயம் | பலம் | 5 | சீரகம் | பலம் | 2 |
| இந்துப்பு | ,, | 5 | கருஞ்சீரகம் | ,, | 6 |
| திப்பிலி | ,, | 5 | மிளகு | ,, | 9 |
| ஓமம் | ,, | 2 | சுக்கு | ,, | 7 |

இவைகளைஉலர்த்தி சூரணித்து எலுமிச்சம்பழச்சாற்றால் ஒருஜாமம்அரைத்து சுண்டக்காய் அளவாக மாத்திரைகளாக்கி தினம் காலையில் ஒரு மாத்திரைவீதம் சாப்பிட்டுவர அக்கினிமந்தம் குன்மம் வாயு பித்தம் கிரகணி குணமாகும்.

## போஜனகுடாரிமாத்திரை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சுக்கு | பலம் | 1 | இந்துப்பு | பலம் | 2 |
| பெருங்காயம் | ,, | 1 | சீரகம் | ,, | 3 |
| இஞ்சி | ,, | 2 | மிளகு | ,, | 3 |

இவைகளை எலுமிச்சம்பழச்சாற்றால் 2-ஜாமம்அரைத்து சுண்டக்காய் அளவாக மாத்திரைகளாக்கி தினம் காலையில் ஒரு மாத்திரை சாப்பிட்டுவர அக்கினிமந்தம் குன்மம் வயிற்றுவலி வாயு பித்தவாயு சூதகவாயு கிரகணி முதலியவைகள் குணமாகும்.

## ரோகநிவாரணமாத்திரை.

| | | |
|---|---|---|
| வேப்பம்பூ | விராகனிடை | 10 |
| பெருங்காயம் | ,, | 1 |
| மிளகு | ,, | 2 |
| சுக்கு | ,, | 2 |
| கொத்தமல்லிவிதை | ,, | 2 |
| கரிப்பிலை | ,, | 2 |
| இந்துப்பு | ,, | 2½ |
| போனவருடத்தியபுளி | ,, | 4 |

இவைகளில் வேப்பம்பூவை நெய்யால்வறுத்து சூரணித்து பிறகு எல்லாம்ஒன்றாக்கி தேவையானஜலத்தைவிட்டுமை போல்அரைத்து கழற்சிக்காய் அளவாக மாத்திரைகளாக்கி

தினம் 2-தடவை ஒருமாத்திரைவீதஞ் சாப்பிட்டுவர பித்தம் வாயு அரோசிகம் அசீர்ணம் மலபந்தம் குணமாகும்.

## சுவர்ணமாத்திரை.

| | |
|---|---|
| புரசம்பிசின் | நீர்முள்ளிவிதை |
| ஜாதிக்காய் | கோஷ்டம் |
| சிறுபூனைக்காலிவிதை | அமுக்கிராக்கிழங்கு |
| சாலாமிசிரி | வாதுமைப்பருப்பு |
| நிலைக்கடம்பு | |

இவைகள் வகைக்குப்பலம்-3, எடுத்துசூரணித்து 8-படி ஜலத்திற்போட்டுக்காச்சி 2-படியாக்கி, அதை மறுபடியுமெரித்து இளகியபதத்திலிறக்கி கல்வத்திலிட்டு முத்து அப்பிரக செந்தூரம், ரஜதபஸ்பம், பவளபஸ்பம், மண்டூரசெந்தூரம், வகைக்குவிராகனிடை-1, சேர்த்து மைபோலரைத்து குன்றிமணிஅளவாக மாத்திரைகளாக்கி கொஞ்சம் ஈரமிருக்கையில் மாத்திரை ஒன்றுக்கு அரைக்கால் சுவர்ணரேக்கைகவசமிட்டு சுவர்ணமணிபோல மாத்திரைகளுருட்டி உலர்த்தி 1-2-மாத்திரை சாப்பிட்டு உடனே 2-சேர் பசும்பாலைக்காய்ச்சிஒருசேராக்கிச் சாப்பிட்டுவர ரத்தம்ஊறும், விந்துகட்டும், தாதுபுஷ்டியுண்டாகும், பத்தியம் அதிகபுளிப்பு காரம் புகை இவைகள் நீக்கவும்.

## ராஜமாத்திரை.

சங்குபஸ்பம்செய்வதுபோல் பலகறைகளை பஸ்பமாக்கி ஒருபலம்தூக்கி அத்துடன் சுக்கு மிளகு திப்பிலி சுத்திசெய்தநாவி சுத்திசெய்தகெந்தகம் சுத்திசெய்தரசம் பொரித்த வெங்காரம் வகைக்குப்பலம்-1, சேர்த்து எலுமிச்சம்பழச்சாற்றுல்அரைத்து மாத்திரைகளாக்கி 1-2-குன்றிமணியிடைவீதம் மிளகுதூளும் நெய்யும்சேர்த்து அதில் வைத்துக் கொடுக்க கிரகணி (11) குணமாகும்.

## அஜமோதாஷ்டகமாத்திரை.

| | |
|---|---|
| ஓமம் | வசம்பு |
| பெருங்காயம் | சிறுதேக்கு |
| சித்திரமூலம் | இந்துப்பு |
| கோஷ்டம் | எலரிசி |

இவைகள் வகைக்கு விராகனிடை-5, வீதம் சூரணித்து ஜலத்தால் மைபோலரைத்து கழற்சிக்காய் அளவாக மாத்திரைகளாக்கி தினம் 2-தடவை ஒருமாத்திரைவீதம் ஜலத்தில் கொடுத்துவர வயிற்றுப்பல் குன்மக்கட்டி குன்மம்(8) வாந்தி அசீர்ணம் முதலிய பலமானரோகங்கள் குணமாகும்.

## இரசமாத்திரை.

| | | | |
|---|---|---|---|
| சுத்திசெய்த | ரசம் | விராகனிடை | 5 |
| ,, | கந்தகம் | ,, | 5 |
| ,, | வெங்காரம் | ,, | 5 |
| ,, | சுக்கு | ,, | 5 |
| சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு | | ,, | 15 |

இவைகளில் ரசமும் கந்தகமும் கல்வத்திலிட்டு அரைத்து பிறகு மற்றசரக்குகளைப்போட்டு மைபோல் ஜலத்தால்அரைத்து கடுகுஅளவாக மாத்திரைகளாக்கி ஒருமாத்திரைஜலத்திலிட ஊறுமாந்தம் வாதம் பொருமல்முதலிய பலரோகங்கள் குணமாகும் பெரியவர்களுக்கு 5-10-மாத்திரைகள் கொடுக்க வாதம் சுரம் வாயு முதலியவைகள்குணமாகும்.

## சித்தாநந்தபயிரவமாத்திரை.

| | |
|---|---|
| கட்டினலிங்கம் | மிளகு |
| சுத்திசெய்தகருநாவி | திப்பிலி |
| சுத்தித்தவெங்காரம் | பெருங்காயம் |
| சுக்கு | |

இவைகள்வகைக்குப்பலம்-1, கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாற்றாலரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி

உலர்த்தி ஒருமாத்திரை இஞ்சிச்சாறு, முலைப்பால் எதிலாகி லும்கொடுக்க சன்னி-13, வாதம்-80, குணமாகும் தேனிலிட தோஷம்தீரும்.

## வேதாந்தபயிரவமாத்திரை.

| | | |
|---|---|---|
| கட்டினலிங்கம் | பலம் | 4 |
| சுத்தித்தவெங்காரம் | ,, | 8 |
| சுத்தித்தகருநாவி | ,, | 12 |
| திப்பிலி | ,, | 12 |

இவைகளை கல்வத்திலிட்டு இஞ்சிச்சாற்றால் நாலு சாம மரைத்து குன்றிமணிஅளவாகமாத்திரைகளாக்கி நிழலில் உலர்த்தி ஒருமாத்திரை அனுபானத்திலிட சந்நிபாதரோகம் (13)வாதம்(80)முதலிய கொடியரோகங்கள் குணமாகும்.

## ராக்ஷசமாத்திரை.

| | | | |
|---|---|---|---|
| சுத்திசெய்த | ரசம் | சுத்திசெய்த | காந்தம் |
| ,, | கந்தகம் | ,, | அப்பிரேகம் |

இவைகளுடன் தாம்பிரபஸ்மம் பலம்-1, சேர்த்து கல்வத்திலிட்டு வெள்ளைச்சாரணைச் சாற்றால் 4-ஜாமம் அரைத்து பிறகு சிந்திற்கொடிக்கஷாயத்தில் 4-ஜாமமும், கொடிவேலி வேர்க்கஷாயம் துளசிச்சாறு கடுக்காய் தானிக்காய் நெல்லி முள்ளி இவைகள்சேர்ந்தகஷாயம் இவைகளால் தனித்தனி 2-ஜாமமும்அரைத்துப் பில்லைசெய்து வெள்ளைச்சாரணையிலை யைஅரைத்து அதற்கு 3-விரற்கடைகனமாய் கவசமிட்டு அந்தகவசம்கருகும்படி புடம்போட்டெடுத்து சித்திரமூலகஷாயத்தால் 4-ஜாமமரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி ஒருமாத்திரை அனுபானத்திலிட சன்னி-13, தோஷம் வாதம்-80, முதலிய கடூரரோகங்கள் குணமாகும்.

## சங்குவடிமாத்திரை.

புளிசமூலம் (இலை-பட்டை-வேர் முதலியவைகள்) உலர்த்தி எரித்தசாம்பலை சலத்தில் கரைத்து வடித்து எரித்து

எடுத்தஉப்பு பலம்-5, கல்லுப்பு இந்துப்பு சௌட்டுப்பு வளையலுப்பு வெடியுப்பு வகைக்குப்பலம்-1, ஐந்துபலம்வெள்ளைச்சங்குதுண்டுகளை எலுமிச்சம்பழச்சாற்றில் போட்டு செங்குகையால் தூளாகிறவரையில்காய்ச்சி பிறகு ரசம் பலம்-2, கந்தகம் பலம்-2, லிங்கம் பலம்-5, இவைகளைச்சுத்திசெய்துசேர்த்து எல்லாம்கல்வத்திலிட்டு ஷை சாற்றால் அரைத்து குன்றிமணிஅளவாக மாத்திரைகளாக்கி ஒருமாத்திரை அனுபானத்தில்கொடுக்க கிரகணி-11, குன்மம்-8, அக்கினிமந்தம், அஜீர்ணம் வாயு உதரரோகம் குணமாகும்.

## சுவர்ணமாத்திரை.

| | |
|---|---|
| தங்கரேக்கு | கோரோஜனை |
| முத்து | குங்குமப்பூ |
| பவளபஸ்பம் | ஏலம் |
| ரசசெந்தூரம் | கிராம்பு |
| சுத்தித்தரசகர்ப்பூரம் | ஜாதிக்காய் |
| பச்சைகர்ப்பூரம் | கோஷ்டம் |
| அப்பிரகசெந்தூரம் | அக்கிராகாரம் |

இவைகள் வகைக்குவிராகனிடை-1, சேர்த்து கல்வத்திலிட்டு வெற்றிலைச்சாறு சந்தனக்கஷாயம் சண்பகப்பூகஷாயம் இவைகளால் தனித்தனியே 3-ஜாமம்அரைத்து உளுந்துஅளவாகமாத்திரைகளாக்கி நிழலில் உலர்த்தி ஒருமாத்திரைவீதம் தகுந்தஅனுபானத்தில்கொடுக்க சுரம்-64, சன்னி-13, காசம்-5, சுவாசம்-5, வலிப்பு-5, இசிவு இருமல் ஜனுப்புமுதலிய பற்பல கடூரரோகங்கள் குணமாகும் இதை குழந்தைகளுக்கு-௨, மாத்திரைவீதம் கொடுக்கலாம்.

## அப்பிரகமாத்திரை.

| | |
|---|---|
| அப்பிரகசெந்தூரம் | ஏலம் |
| ரசசெந்தூரம் | கிராம்பு |
| ரசகற்பூரம் | ஜாதிக்காய் |

கோரோஜனை
பச்சைகற்பூரம்
குங்குமப்பூ
கோஷ்டம்
அக்கிராகாரம்

இவைகள் வகைக்குப்பலம்-1, கல்வத்திலிட்டு வெற்றிலைச்சாறு சந்தணக்கஷாயம் சண்பகப்பூகஷாயம் இவைகளால் தனித்தனியாய் 3-ஜாமம்அரைத்து சிறுபயறுஅளவாக மாத்திரைகளாக்கி ஒருமாத்திரைவீதம் குழந்தைகளுக்குஅனுபானத்திலிட சுரம் கபம் சன்னி வாதம் இசிவு ஜஹுப்புமுதலிய பற்பலமானரோகங்கள் குணமாகும்.

---

## கோரோஜனைமாத்திரை.

கோரோசனை
குங்குமப்பூ
சுத்தித்தகற்பூரம்
பச்சைக்கற்பூரம்
ஏலம்
கிறம்பு
கோஷ்டம்
அக்கிராகாரம்
ரசபஸ்பம்

இவைகள் வகைக்குவிராகனிடை-1, கல்வத்திலிட்டு சந்தணக்கஷாயத்தால் மைபோலரைத்து உளுந்தளவாகமாத்திரைகளாக்கி ஒருமாத்திரைவீதம் அனுபானத்தில் கொடுக்க குழந்தையின்சுரம் ஜஹுப்பு மாந்தம் முதலியவைகள் தீரும்.

## கஸ்தூரிமாத்திரை.

| | | |
|---|---|---|
| கஸ்தூரி | விராகனிடை | 1 |
| குங்குமப்பூ | ,, | 3 |
| சுக்கு | ,, | 4 |
| கிராம்பு | ,, | 2 |
| ஜாதிக்காய் | ,, | 2 |
| கோஷ்டம் | ,, | 2 |
| அக்கிராகாரம் | ,, | 2 |

இவைகளை கல்வத்திலிட்டு முலைப்பாலால் மைபோலரைத்து கடுகு அளவாக மாத்திரைகளாக்கி நிழலில் உலர்த்தி

1-மாத்திரை முலைப்பாலில் கொடுக்க குழந்தையின் மாந்தம் சுரம் ஜன்னி வலிப்பு இசிவு கபரோகங்கள் முதலிய கபரோகங்கள் குணமாகும். பெரியவர்களுக்கு 4-6-மாத்திரை கொடுக்கலாம்.

## லிங்கமாத்திரை.

| | | |
|---|---|---|
| கட்டினலிங்கம் | விராகனிடை | 8 |
| மிளகு | ,, | 2 |
| திப்பிலி | ,, | 2 |

கல்வத்திலபோட்டு முலைப்பாலாலரைத்து உளுந்து அளவாக மாத்திரைகள்செய்து ஒருமாத்திரை அனுபானத்திலிட சுரம் வாதம் குடல்வாயு அபானவாயு குணமாகும்.

## லிங்கபேதிமாத்திரை.

| | | | |
|---|---|---|---|
| | ரசபஸ்பம் | பலம் | 2 |
| சுத்தித்த | லிங்கம் | ,, | 2 |
| ,, | வெங்காரம் | ,, | 2 |
| ,, | நேர்வாளப்பருப்பு | ,, | 8 |
| ,, | ஆமணக்குபருப்பு | ,, | 4 |

இவைகளை கல்வத்திலிட்டு விளாம்பிசின் ஜலத்தாலரைத்துஉளுந்துஅளவாகமாத்திரைகளாக்கி 1-2-மாத்திரை கொடுக்க சுரம் வாதம் குடல்வாயு முதலியவைகள் குணமாகும்.

## கற்பூரமாத்திரை.

| | | |
|---|---|---|
| சுத்திசெய்தரசகற்பூரம் | விராகனிடை | 5 |
| அழிஞ்சிவேர்ப்பட்டை | ,, | 5 |
| கொடிவேலிவேர்ப்பட்டை | ,, | 5 |
| சுத்தித்தநேர்வாளப்பருப்பு | ,, | 20 |

இவைகளைக் கல்வத்திலபோட்டு முலைப்பால் கையாந்தகரைச்சாறு இவைகளால் வகைக்கு ஒருஜாமம் அரைத்து உளுந்துஅளவாக மாத்திரைகளாக்கி ஒருமாத்திரைதேனிலிட சகலசுரமும் வாதம்-80-ம் தீரும்.

## தாளக மாத்திரை.

| | | | |
|---|---|---|---|
| சுத்திசெய்த | தாளகம் | விராகனிடை | 1 |
| ,, | ரசம் | ,, | 1 |
| ,, | கந்தகம் | ,, | 1 |
| ,, | கருநாவி | ,, | 1 |

இவைகளுடன் கடுகுரோகணி சுக்கு திப்பிலி வகைக்கு விராகனிடை-5 சேர்த்து கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாற்றால் மைபோலரைத்து சிறுபயறு அளவாக மாத்திரைகளாக்கி 1-2-மாத்திரை தினம் 2-தடவைகொடுக்க சகலசுரமும் குணமாகும்.

## லிங்க மாத்திரை.

| | | | |
|---|---|---|---|
| | ரசபஸ்பம் | விராகனிடை | 1 |
| | கட்டினலிங்கம் | ,, | 1 |
| | பச்சைகற்பூரம் | ,, | 1 |
| | ஜாதிக்காய் | ,, | 1 |
| சுத்தித்த | நேர்வாளப்பருப்பு | ,, | 1 |

இவைகளைச்சேர்த்து கல்வத்திலிட்டு கற்றாழைச் சாற்றால் அரைத்து உளுந்து அளவாக மாத்திரைகளாக்கி 2-3-மாத்திரை அனுபானத்தில்கொடுக்க சகலசுரங்கள் உடனே குணமாகும்.

## மனோசிலை மாத்திரை.

| | |
|---|---|
| சுத்தித்த மனோசிலை | திப்பிலி |
| சுக்கு | திப்பிலிமூலம் |
| மிளகு | |

இவைகள் வகைக்கு விராகனிடை-1 சேர்த்து கல்வத்தில்போட்டு துளசிச்சாறு வெள்ளாட்டுமூத்திரம் இவைகளால் வகைக்கு ஒருஜாமம் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி ஒருமாத்திரை வெந்நீரில் மூன்றும் நான்காம்முறை சுரத்திற்கும் குப்பைமேனிச்சாற்றில் ஜன்னிக்கும் ஜலத்தில் வாயுவுக்கும் கொடுக்க குணமாகும்.

## பாஷாண மாத்திரை.

| | | | |
|---|---|---|---|
| சுத்திசெய்த | வெள்ளைப்பாஷாணம் | விராகனிடை | ½ |
| ,, | கௌரிப்பாஷாணம் | ,, | ½ |
| ,, | ரசம் | ,, | ½ |
| ,, | மிளகு | ,, | 10 |

இவைகளைச்சேர்த்து கல்வத்திலிட்டு மிளகு கஷாயம் கரு ஊமத்தையிலைச்சாறு கொம்புப்பாகல் இலைச்சாறு இவைகளால் வகைக்கு ஒருஜாமமரைத்து சிறுபயறு அளவு மாத்திரைகளாக்கிமோர்காடி இவைகளில் எதிலாகிலும் ஒரு மாத்திரைகொடுக்க சுரம் (64) ங்குணமாகும் பத்தியம் புளி உப்பு தள்ளவும்.

## சுரகுடாரி மாத்திரை.

| | | |
|---|---|---|
| கழற்சிப்பருப்பு | கிறேன்ஸ் | 200 |
| மிளகு | ,, | 80 |
| பெருங்காயம் | ,, | 40 |

இவைகளை கல்வத்திலிட்டு தேன்சேர்த்து அரைத்து-30 மாத்திரைகளாக்கி ஒருமாத்திரைவீதம் தினம் 2-தடவை கொடுக்க குளிர்சுரம் குணமாகும்.

## கட்டுவாங்க மாத்திரை.

| | | |
|---|---|---|
| கொடி-குறுஞ்சாயிலைதூள் | விராகனிடை | 4 |
| விளாம்பிசின் | ,, | 20 |
| அபினி | ,, | ½ |

இவைகளை கல்வத்திலிட்டு அரைத்து 50-மாத்திரைகளாக்கி ஒருமாத்திரைவீதம் கொடுத்துவர பேதி சீதபேதி இருமல் கக்குவான் அதிசாரபேதி குணமாகும்.

## பேதி மாத்திரை.

| | |
|---|---|
| கட்டினலிங்கம் | கடுகுரோகணி |
| ஏலம் | கோஷ்டம |
| சண்பகப்பூ | |

வகைக்கு விராகனிடை-3 சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு விராகனிடை 15-இவைகளை கல்வத்திலிட்டு விளாம்பிசின்ஜலத்தால் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி உலர்த்தி ஒருமாத்திரைகொடுக்க செவ்வையாய் பேதியாகும் பேதி அதிகமானல் புளித்தமோரும் அன்னமும் சாப்பிட பேதிநிற்கும்.

## சுரஹர மாத்திரை.

| | |
|---|---|
| கிராம்பு | திப்பிலி |
| ஏலம் | கடுக்காய் |
| ஜாதிக்காய் | தாணிக்காய் |
| சந்தணம் | நெல்லிவற்றல் |
| சுக்கு | கடுகுரோகணி |
| மிளகு | தேவதாரம் |

வகைக்கு விராகனிடை-5 குங்குமப்பூ விராகனிடை-10 இவைகளை கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாற்றுலும் கண்டங்கத்திரிப்பழச் சாற்றுலும் வகைக்கு 2-ஜாமம் அரைத்து உளுந்து அளவாகமாத்திரைகளாக்கி ஒருமாத்திரை வீதம் அனுபானத்தில்கொடுக்க குளிர்சுரம், சன்னிசுரம், குணமாகும்.

## பாலசஞ்சீவி மாத்திரை.

| | | |
|---|---|---|
| கோரோஜனை | விராகனிடை | 7 |
| கடுகுரோகணி | ,, | 7 |
| வெங்காரம் | ,, | 7 |
| சுக்கு | ,, | 7 |
| சுத்திதநேர்வாளப்பருப்பு | ,, | 7 |

இவைகளைச்சேர்த்து கல்வத்திலிட்டு முலைப்பாலாலரைத்து கடுகு அளவாகமாத்திரைகளாக்கி 1-2-மாத்திரை அனுபானத்தில்கொடுக்க சகலசுரம் மாந்தம் முதலிய பற்பலரோகங்கள் குணமாகும்.

## பாலசுர மாத்திரை.

| | |
|---|---|
| பெருஞ்சீரகம் | இந்துப்பு |
| கருஞ்சீரகம் | இலுப்பைப்பருப்பு |
| அதிமதுரம் | சாஸ்திரபேதி |
| கோஷ்டம் | |

வகைக்குப்பலம்-2 கோரோசனை பலம்-6 இவைகளைக் கல்வத்திலிட்டு குமரிச்சாறு முலைப்பால் இவைகளால் வகைக்கு 2-ஜாமம் அரைத்து உளுந்து அளவாக மாத்திரைகளாக்கி ஒருமாத்திரைவீதம் முலைப்பாலில்கொடுத்துவர சகலசுரங்கள் குணமாகும்.

## விநோதசஞ்சீவி மாத்திரை.

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு | பலம் | 1 |
| பச்சைக்கற்பூரம் | ,, | 1 |
| சுக்கு | ,, | 1 |
| சாதிக்காய் | ,, | 1 |
| கருவாப்பட்டை | ,, | 1 |

இவைகளை கல்வத்திலிட்டு கற்றாழைச்சாற்றால்(மைபோலரைத்து கடுகு அளவாக மாத்திரைகளாக்கி 1-2-மாத்திரை அனுபானத்திலிட குழந்தைகளுக்குக்காணும் சுரம் மாந்தம் முதலியவைகள் குணமாகும்.

## பேதிமாத்திரை.

| | | |
|---|---|---|
| வெள்ளைக்காக்கணுன்வேர் | விராகனிடை | 2 |
| திப்பிலி | ,, | 2 |
| சுக்கு | ,, | 3 |

| | | |
|---|---|---|
| மிளகு | விராகனிடை | 3 |
| விளாம்பிசின் | ,, | 2 |

இவைகளைக் கல்வத்திலிட்டு ஜலத்தால் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி ஒருமாத்திரை ஜலத்தில்கொடுக்க பேதி நன்ருய் ஆகும் குழந்தைகளுக்கு ½-மாத்திரை கொடுக்கவும்.

## பாலசுரஹர மாத்திரை.

| | | |
|---|---|---|
| கருவாப்பட்டை நிழலில் உலர்த்தினது | விராகனிடை- | 10 |
| ஆடுதீண்டாப்பாளை வேர்ப்பட்டை | ,, | 10 |

இவைகளைச் சேர்த்து கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாற்ருல் ஒருஜாமம் அரைத்து கடுகு அளவாக மாத்திரைகளாக்கி ஒருமாத்திரை அனுபானத்தில்கொடுக்க குழந்தையின் சுரம் விஷம் முதலியவைகள் குணமாகும்.

## ஆதிசேஷவிஷஹர மாத்திரை.

| | | |
|---|---|---|
| கோடகசாலையிலை | பிடி | 2 |
| எருக்கம்பழுப்பு | ,, | 2 |
| மிளகு | பலம் | 1 |

இவைகளை கல்வத்திலிட்டு மைபோல் அரைத்து சுண்டக்காய் அளவாக மாத்திரைகளாக்கி நிழலில் உலர்த்தி ஒரு மாத்திரை 1-2-மணிக்கு ஒருதடவைகொடுக்க நல்லபாம்பு விஷக்கடி பூரான் ஜலமண்டலி முதலியவைகளின் விஷக்கடிகள்தீரும் எலி தேள் இவைகளின் விஷக்கடிகளுக்கு இதை கொடுக்கக்கூடாது.

## உதயாதித்திய மாத்திரை.

| | | | |
|---|---|---|---|
| சுத்திசெய்த | ரசம் | பலம் | 1 |
| ,, | கந்தகம் | ,, | 2 |

இவைகளை கல்வத்திலிட்டு கற்றாழைச்சாற்றால் ஒருநாள் அரைத்து ஒருகலயத்தில்வைத்து அந்த மொத்தையின் பேரில் 2-பலம் சுத்திசெய்த தாம்பிரத்தை கிண்ணியாக்கி கவிழ்த்து கிண்ணியின்சந்துவாயில் எருவின் சாம்பலைப்போட்டு அதின்மேல்சாணியும் ஜலமுஞ்சேர்த்துப்போட்டு கிண்ணத்தைமறைத்து பிறகு அந்தகலயத்தை அடுப்பின்மேல் வைத்து காடாக்கினியாய் 2-ஜாமம் எரித்து எடுத்து கல்வத்திலிட்டு கருஅத்தி சித்திரமூலம் கடுக்காய் தானிக்காய் நெல்லிமுள்ளி முருங்கக்காயின் உள்பசை வாய்விளங்கம் சிவதைவேர் இவைகளின் கஷாயங்களால் தனித்தனியே ஒவ்வொருநா ளரைத்து குன்றிமணி அளவாகமாத்திரைகளாக்கி ஒருமாத்திரைவீதம் பசும்பாலிலாவது அல்லது கடுக்காய் தானிக்காய் நெல்லிவற்றல் இவைகளைச்சேர்த்து காய்ச்சின கஷாயத்திலாவது கொடுத்துவர வெண்குஷ்டம் விசர்சிகா ரோகம் குணமாகும். வெண்குஷ்டரோகி இதைச்சாப்பிட்டால் 4-வது அல்லது 7-வதுநாளில் தேகத்தில் சிரங்குகள் காணும் அப்போது குன்றிமணிவிதையும் சித்திரமூலமும் சூரணித்துஜலத்தில்கரைத்து உடம்பில்பூசிக்கொள்வதாலும் அல்லது மனோசிலை நாயுருவியின்சாம்பல் இவைகளை ஜலத்தில்கரைத்து உடம்பில்பூசிக்கொள்வதாலும் குணமாகும்.

## மாத்திரைவகைபரணி

முற்றிற்று.

---

இவ்வளவு வெள்ளியநடையாய் அச்சிட்டு பயிரங்கப்படுத்திய அனுபோகவயித்தியத்திற்கு சரக்குசுத்திகள் சொல்லவில்லையென கவலைப்படவேண்டாம் இதற்குமுதற்பாகத்திலும் எட்டாம்பாகத்திலும் சுத்திகள் விவரமாக தெரிந்துக்கொள்ளலாம்.

இனி ஏழாம்பாகத்தில்
அற்புதமுறைகள் சொல்லப்படும்.

உ

தேவிசகாயம்.

# இரண்டாவது

# சூரணவகைபரணி.

## ஆனந்தவிநோதச் சூரணம்.

| | | |
|---|---|---|
| வறுத்தசேங்கொட்டை | பலம் | 5 |
| எட்டிவிதை | ,, | 1 |
| கொடிவேலிவேர்ப்பட்டை | ,, | 1½ |
| பரங்கிப்பட்டை | ,, | 4 |
| ரசம் | ,, | 1 |
| கந்தகம் | ,, | 1 |
| அரிதாளம் | ,, | 2 |

இவைகளைச் சுத்திசெய்துசேர்த்து சூரணித்து இரண்டுகுன்றிமணியிடை சூரணத்தில் ஒருதுளி குஷ்டகுடாரிதயிலத்தைச் சேர்த்துக்கொடுக்க வெங்குஷ்டம் கருங்குஷ்டம் கிரந்தி புண் அரையாப்பு மூலம் முதலிய அநேக கொடிய ரோகங்கள் குணமாகும்.

## லவணச்சூரணம்.

| | | |
|---|---|---|
| பூநீர் | படி | 2 |
| கறிஉப்பு | ,, | 2 |
| வெடியுப்பு | ,, | 1 |

இவைகளைத் தனித்தனியாய் ஜலத்தில் கரைத்துவைத்து மறுநாள் தெளிவை எடுத்து ஒன்றாக்கி அதில் 8-விராகனிடை பெருங்காயத்தைச்சேர்த்து உப்பைக்கட்டும் வரையில் எரித்து சூரணித்து கற்கார்க்கு சீசாவில்போட்டு வைத்துக்

கொண்டு தினம்காலையில் நீராகாரத்தில் விராகனிடை 1-போட்டுச் சாப்பிட்டுவர வயிறுபொருமல் குன்மம் வயிற்றுவலி வயிற்றுக்குத்தல் உப்பிசம் முதலிய பலமானரோகங்கள் குணமாகும்.

## கலிங்காதிச்சூரணம்.

| | | |
|---|---|---|
| வரிக்குமட்டிச்சாறு | படி | 2 |
| எருமைமோர் | ,, | 2 |
| கறிஉப்பு | ,, | 2 |

இவைகளைச்சேர்த்து இதில் சுக்கு குரோசாணி ஓமம் வெடியுப்பு இந்துப்பு வளையலுப்பு சவுட்டுப்பு வகைக்கு விராகனிடை 2-போட்டு சுண்டக்காய்ச்சி எடுத்து சூரணித்து கற்கார்க்கு சீசாவில்போட்டு வைத்துக்கொண்டு தினம் விராகனிடை 1-வீதம் நீராகாரத்தில் காலையில்சாப்பிட்டுவர குன்மம் வயிற்றுவலி அஜீர்ணம் பொருமல் விக்கல் முதலிய பற்பல கடூரரோகங்கள் குணமாகும்.

## இராஜகேசரிச்சூரணம்.

அதிமதுரம்
ஏலம்
கிராம்பு
சுக்கு
திப்பிலி
வெங்கப்பட்டை
தும்பராஷ்டகம்
மாசிக்காய்
வால்மிளகு

இவைகள்வகைக்குபலம் ¼-சாதிக்காய்த்தூள்-பலம் ஹ கஸ்தூரி விராகனிடை-1 இவைகளை வெவ்வேறாகச் சூரணித்து ஒன்றாகச்சேர்த்து அதில்-½ விராகனிடைவீதம் தினம்-2 3-தடவை வெற்றிலைச்சாற்றிலாவது தேனிலாவது கொடுக்க காசம் (5) சுவாசம் (5) க்ஷயம் (4) சிலேஷ்மம் (2-3) இருமல் சகல கபரோகங்கள் குணமாகும்.

## சாமுதரச்சூரணம்.

இந்துப்பு
ஓமம்
எவக்ஷாரம்
கடுக்காய்

திப்பிலி
வாய்விளங்கம்
இஞ்சி
கல்லுப்பு
பெருங்காயம்

இவைகளைச் சமமாகச்சேர்த்து சூரணித்து போஜனஞ் செய்யும்போது முதல்அன்னத்தில் 3-விராகனிடை சூரணத்தையும், 5-விராகனிடை பசுவின் நெய்யும் சேர்த்துச் சாப்பிட்டுவர வயிற்றுப்பல் வாயு குன்மம்-8, வயிற்றுவலி அஜீர்ணம் வாதம்-80, கிரகணி-11, மூலம்-3, பாண்டு-5,மகோதரம்-8, முதலிய பயங்கரமானரோகங்கள் குணமாகும்.

---

## அமிர்தவல்லிச்சூரணம்.

லவங்கப்பட்டை
கிராம்பு
சுக்கு
சித்தரத்தை
மிளகு
அதிமதுரம்
திப்பிலி
அதிவிடையம்
ஏலம்
அக்கிராகாரம்

இவைகள் வகைக்குவிராகனிடை-5, உலர்த்தி சூரணித்து வஸ்திரகாயஞ்செய்து கற்கார்க்குசிசாவில்போட்டு வைத்துக்கொண்டு அதில் கொஞ்சம் எடுத்து தேனில்கலந்து நாக்கில்தடவிவர நாக்கில் ஜலம்ஊறும் இத்துடன் வெங்காரம் சேர்த்துக்கொடுக்க நீர்இறங்கும் விரோசனக்காரிகள் சேர்த்துக்கொடுக்க மலம்உதைக்கும், கண்டாஅவுஷதத்தில் இதைச்சேர்த்துக்கொடுக்க அதின்குணம் விசேஷிக்கும், கஸ்தூரி, குங்குமப்பூ, ரசபஸ்மம் இம்மூன்றும் சேர்த்துச் சூரணித்து அத்துடன் இதைச்சேர்த்துக் கொடுக்க சன்னி சயித்தியம் தீரும்.

---

## குன்மருடாரிச்சூரணம்.

வரிக்குமட்டிக்காய்ச்சாறு
எருமைமோர்
கறிவுப்பு

இவைகளைச்சேர்த்து அதில்வெடியுப்பு இந்துப்பு வளையலுப்பு சவுட்டுப்பு வகைக்குவிராகனிடை-2, போட்டு சுண்டக்காய்ச்சி சூரணித்து 5 - துளி பெப்பரமிட்டு தயிலத்தைவிட்டு மிஸ்ரித்து ஒருகல்கார்க்கு சீசாவில்போட்டுதினம்ஒரு விராகனிடை வீதம் நீராகாரத்தில் கொடுக்க குன்மம் 8 - ம் தீரும்.

## அமிர்தசஞ்சீவிச் சூரணம்.

| | |
|---|---|
| ஏலம் | வால்மிளகு |
| கிரம்பு | கசகசா |
| ஜாதிக்காய் | மாசிக்காய் |
| ஜாதிப்பத்திரி | தாளிசப்பத்திரி |

இவைகள் வகைக்குப் பலம்-1, சூரணித்து சீனி சீந்திற் சர்க்கரை வகைக்குப்பலம்-6, அத்துடன் சேர்த்து திரிகடிசூரணத்தில் ரசபஸ்மம்வைத்து பசும்நெய்யில்தினம் 2-தடவை சாப்பிட்டுவர மேகநீர் மூலச்சூடு பிரமேகம் பிரமியம் வெட்டை அஸ்திசுரம் மேகஊரல் கைகால்எரிவு பித்தம் தீரும்.

## ராஜஏலாதிச்சூரணம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஏலம் | விராகனிடை | 64 | சிறுநாகப்பூ | விராகனிடை | 4 |
| சுக்கு | ,, | 32 | மிளகு | ,, | 2 |
| கூகைநீர் | ,, | 16 | கிராம்பு | ,, | 1 |
| தாளிசப்பத்திரி | ,, | 8 | | | |

இவைகளைஉலர்த்திச் சூரணித்து அத்துடன் சீனி சேர் $1\frac{1}{2}$, சேர்த்து தினம் திரிகடிவீதம் அந்திசந்தி சாப்பிட்டுவர ரணம் மேகஊறல் அரிகிரந்தி வாயுகிரந்தி பித்தம்-40, வாதம் 80, பெரும்பாடு எலும்புருக்கி சொறிசிரங்குமுதலிய பயங்க ரோகங்கள் குணமாகும்.

## தாளிசப்பத்திரிச்சூரணம்.

ஜாதிக்காய்
ஜாதிப்பத்திரி

| | |
|---|---|
| வால்மிளகு | அக்கிராகாரம் |
| லவங்கப்பட்டை | கடுக்காய் |
| வாய்விளங்கம் | தாணிக்காய் |
| மல்லி | நெல்லிவற்றல் |
| சீரகம் | சடாமாஞ்சில் |
| திப்பிலி | சோம்பு |
| கோஷ்டம் | |

இவைகள் வகைக்குப்பலம்-½, தாளிசப்பத்திரி பலம்-5, இளவறுப்பாய்வறுத்து சூரணித்து அத்துடன் 10-பலம்சீனியைச்சேர்த்து தினம் 2-தடவை திரிகடிவீதம் சாப்பிட்டுவர, காசம்-5, க்ஷயம்-4, பித்தபாண்டு பித்தவெட்டை ஈளை அஸ்திசுரம் அஸ்திவெட்டை தாகம் கைகால்எரிவு கிரகணி விக்கல் பொருமல் சுரம் முதலிய அனேக பலமான ரோகங்கள் குணமாகும்.

## மஹா அசுவகந்திச் சூரணம்.

| | | |
|---|---|---|
| லவங்கம் | பலம் | 1 |
| சிறுநாகப்பூ | ,, | 2 |
| காசாஏலம் | ,, | 4 |
| நற்சீரகம் | ,, | 8 |
| திப்பிலி | ,, | 16 |
| சுக்கு | ,, | 32 |

இவைகளைச்சுத்திசெய்து அமுக்கிருக்கிழங்கு பலம்-64, இவைகளை இளவறுப்பாகவறுத்துச் சூரணித்து சீனகற்கண்டுப்பொடி சேர்-7, சேர்த்து திரிகடிவீதம் பசும்பாலிலாவது நெய்யிலாவது சாப்பிட்டுவர மேகம்-18, சுவாசம்-5,காசம்-5, பாண்டு-5, குன்மம்-8, அஸ்திசுரம் முதலிய கொடிய ரோகங்கள்குணமாகும் ரத்தவிர்த்தியாகும்.

## திரிநேத்திரச்சூரணம்.

| | | |
|---|---|---|
| சுக்கு | பலம் | 1 |
| திப்பிலி | ,, | 1 |
| மிளகு | ,, | 1 |

இவைகளை இளவறுப்பாய் வறுத்துச் சூரணித்து பொற்றலை கையாந்தகரையை ஆவிநீரில்போட்டு 2 - நிமிஷம் மூடி வைத்து பிறகுஎடுத்துஅரைத்து ஒருபடிசாறுஎடுத்து அதில் மேற்படி சூரணத்தைக்கரைத்து அரைத்து பில்லைதட்டிஉலர்த்தி சூரணித்து அதற்கு இரட்டிப்பு கற்கண்டு பொடியைச் சேர்த்து திரிகடிவீதம் தினம் காலை மாலை சாப்பிட்டுவர பித்தம்-40, பித்தவாயு உஷ்ணவாயு அக்கினிமந்தம்முதலிய கொடியரோகங்களெல்லாம் குணமாகும். தாதுபுஷ்டியும் ரத்தவிர்த்தியும் உண்டாகும்.

## மஹாதூதுளைச்சூரணம்.

| | | |
|---|---|---|
| தூதுளைப்பழம் | பலம் | 5 |
| சிவகரந்தைப்பழம் | ,, | 5 |
| கண்டங்கத்திரிபழம் | ,, | 5 |
| கோரோஜனை | விராகனிடை | 1 |

இவைகளைஉலர்த்திச் சூரணித்து அத்துடன் தாளிசப்பத்திரிபலம்-3, சிற்றரத்தை பலம்-1, மிளகுபலம்-1, இவைகளை இளவறுப்பாய்வறுத்து சூரணித்துச் சேர்த்து திரிகடிவீதம் நெய்யிலாவது சர்க்கரையிலாவதுகொடுக்க மகாபயங்கரமான சகலவித கபரோகங்கள் குணமாகும்.

## லகுதூதுளைச்சூரணம்.

| | |
|---|---|
| தூதுளை | முருங்கைப்பட்டை |
| திப்பிலி | சீனி |

இவைகள் வகைக்குப்பலம்-2, உலர்த்திச் சூரணித்து தினம் 2-தடவை 3 - விராகனிடை வீதம் பசும்வெண்ணெயில் கொடுக்க ஈளை இருமல் சகலமானகபரோகங்கள் குணமாகும்.

## சொர்ணனந்தச்சூரணம்.

| | | |
|---|---|---|
| நறுக்கி உலர்த்தின இஞ்சி | பலம் | 4 |
| அதிமதுரம் | ,, | 3 |
| திப்பிலி | ,, | $2\frac{1}{2}$ |

இவைகளைச் சூரணித்து வஸ்திரகாயஞ்செய்து அத்துடன் ஒருசேர் கற்கண்டுபொடியைச்சேர்த்து தினம் திரிகடிவீதம் சாப்பிட்டுவர வயிற்றுவலி பொருமல் அக்கினிமந்தம் முதலிய மகாஉபத்திரவத்தை உண்டாக்குகிற ரோகங்களெல்லாம் குணமாகும்.

---

## பயிரவச்சூரணம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இந்துப்பு | பலம் | 1 | சுக்கு | பலம் | 4 |
| சீரகம் | ,, | 2 | திப்பிலி | ,, | 5 |
| ஓமம் | ,, | 3 | மிளகு | ,, | 6 |

இவைகளுடன் விதைநீக்கினகடுக்காய் பலம்-20, இவைகளைச்சூரணித்து வஸ்திரகாயஞ்செய்து சீனி பலம்-40, சேர்த்து தினம் அந்திசந்தி திரிகடிவீதம் சாப்பிட்டுவர அக்கினிமந்தரோகம் வயிற்றுவலி வயிறுஉப்பல் குன்மம் அசீர்ணம் மலக்கட்டு முதலிய கொடியரோகங்கள் குணமாகும்.

---

## சண்முகச்சூரணம்.

| | |
|---|---|
| மிளகு | சீரகம் |
| திப்பிலி | இந்துப்பு |

இவைகளின் தூள் வகைக்குப் பலம் - 1, பெருங்காயம் பலம்-ஹ, கரிப்பிலைத்தூள்பலம்-உ, இவைகளைச்சேர்த்து ஒரு விராகனிடை வீதம் முதல் அன்னத்தின்மேல் போட்டு நெய்யைக் காய்ச்சிவிட்டுச் சாப்பிட அஜீர்ணம் வயிற்றுக்கடுப்பு அக்கினிமந்தம் குன்மம் வாயு முதலிய கடூர ரோகங்கள் குணமாகும்.

---

## அக்கினிச் சூரணம்.

| | |
|---|---|
| சுக்கு | சீரகம் |
| திப்பிலி | லவங்கம் |

இவைகள் வகைக்குப்பலம்-1, இளவறுப்பாய் வறுத்து சூரணித்து ஒருவிராகனிடைவீதம் தினம் 2-தடவை நெய்யி

லாவது சீனியிலாவது கொடுத்துவர அக்கினிமந்தம் வயிற்று வலி குன்மம் வாதம்முதலிய கொடியரோகங்கள்குணமாகும்.

## ராஜலவணச்சூரணம்.

| | |
|---|---|
| காந்தம் | வளையலுப்பு |
| கறிஉப்பு | பெருங்காயம் |
| வெடியுப்பு | |

இவைகள் வகைக்குப்பலம்-2, சூரணித்து 3-படி பசும் பாலில்போட்டு சுண்டக் காய்ச்சி சூரணித்து தினம் திரிகடி வீதம் வெந்நீரில்கொடுக்க குன்மம்-8, வாயு அசீரணம் வயிற்றுவலிமுதலிய பலமானரோகங்கள் குணமாகும்.

## லவணச்சூரணம்.

| | | |
|---|---|---|
| பூநீர் | படி | 2 |
| கறிஉப்பு | ,, | 2 |
| வெடியுப்பு | ,, | 1 |

இவைகளைத் தனித்தனியாய்ஜலத்தில்கரைத்துவைத்து மறுநாள் தெளிவையெடுத்து ஒன்றாய்ச்சேர்த்து அதில்-8-விராகனிடை பெருங்காயத்தைச்சேர்த்து சுண்டயெரித்துச்சூரணித்து கற்கார்க்கு சீசாவில் போட்டு வைத்துக் கொண்டு தினம் காலையில் நீராகாரத்தில் ஒருவிராகனிடைப்போட்டுச் சாப்பிட்டுவர வயிறுபொருமல் குன்மம் உதரரோகம் மலக்கட்டு வயிற்றுவலி அசீர்ணம்முதலிய அனேககடூரரோகங்கள் குணமாகும்.

## பஞ்சமுகச்சூரணம்.

| | |
|---|---|
| சுக்கு | நிலவாகைசமூலம் |
| மிளகு | வாய்விளங்கம் |
| ஓமம் | |

இவைகள் வகைக்குச்சேர் - 1, ரவியிலுலர்த்தி சூரணித்து அத்துடன் சீனி ஒருவீசைசேர்த்து திரிகடிவீதம் சாப்

பிட்டுவர பொருமல் வாயு உஷ்ணம் பித்தம் கபம் வாந்தி முதலிய மகா உபத்திரவத்தைத் தருகின்ற ரோகங்களெல்லாம் குணமாகும்.

## கட்டுவாதிச் சூரணம்.

| | |
|---|---|
| மாம்பருப்பு | கறிவேப்பிலை |
| நெல்லிக்காய் | சுண்டக்காய் |
| மாதுளம்பழத்தோல் | வெந்தியம் |

இவைகளை உலர்த்தி சூரணித்து ஒருவிராகனிடைவீதம் எருமைத்தயிரில்கொடுக்க அதிசாரம் - 6, சீதபேதி கிரகணி 11, குணமாகும்.

## பித்தராஜாங்கச்சூரணம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொத்தமல்லிவிதை | பலம் | 6 | கிராம்பு | பலம் | 1 |
| சதகுப்பை | ,, | 1 | கருஞ்சீரகம் | ,, | 1 |
| சீரகம் | ,, | 1 | கருவாப்பட்டை | ,, | 1 |
| அதிமதுரம் | ,, | 1 | | | |

இவைகளை இளவறுப்பாய் வறுத்துச் சூரணித்து அத்துடன் கற்கண்டு பலம்-6, பொடித்துச்சேர்த்துத் திரிகடிவீதம் தினம் காலையில்கொடுக்க பித்தவாயு பித்தவெட்டைபித்தவாந்தி அசீர்ணம் வாய்ஊரல் முதலிய பித்தரோகங்க ளெல்லாம் குணமாகும்.

## பரங்கிப்பட்டைச்சூரணம்.

| | |
|---|---|
| நீர்வெடிமுத்து | நெல்லிமுள்ளி |
| பரங்கிப்பட்டை | திப்பிலி |
| கடுக்காய் | ஓமம் |
| தானிக்காய் | திப்பிலிமூலம் |

இவைகள் வகைக்குப்பலம்-1, அமுக்கிராவேர் பலம்-4, கிராம்பு சாதிக்காய் சாதிப்பத்திரி வகைக்கு விராகனிடை-1, இவைகளை இளவறுப்பாய்வறுத்துச் சூரணித்து சீனிபலம்-6 சேர்த்து திரிகடி வீதம் தேனில் கொள்ள மேகசூலை மேக

ஊறல் மேககாங்கை மேகத்தடிப்பு மேகவாயு முதலிய கரேரோகங்கள் குணமாகும். பத்தியம் புளிஉப்பு தள்ளவும்.

## திப்பிலிச்சூரணம்.

| | | |
|---|---|---|
| திப்பிலி | பலம் | 4 |
| உலர்ந்தகுப்பைமேனி | ,, | 4 |

இவைகளின்சூரணம் வகைக்குசேர்-1, சேர்த்து திரிகடிவீதம் பசுநெய்யில்கொடுக்க பவுத்திரம்-15, குணமாகும்.

## பலகாரிச் சூரணம்.

| | | |
|---|---|---|
| கலம்பாவேர்சூரணம் | பலம் | 2 |
| அயச்செந்தூரம் | ,, | 2 |
| சுக்குதூள் | ,, | 2 |
| ரேவல்சின்னித்தூள் | ,, | 1 |

இவைகளைச்சேர்த்து ½-விராகனிடைவீதம் தினம் 2-3-தடவை கொடுக்க ரத்தம் ஊறும் பலம்வரும் பாண்டு(5) ங் குணமாகும்.

## பித்தஹரச்சூரணம்.

| | |
|---|---|
| இஞ்சி | ஏலம் |
| வில்வவேர் | நெல்லிவற்றல் |
| சுக்கு | அதிமதூரம் |

இவைகள் வகைக்குப் பலம் - 1, உலர்த்திச் சூரணித்து அத்துடன் சீரகத்தூள் நெற்பொரித்தூள் வகைக்குப்பலம்-6, சீனிபலம்-3, இவைகளைச் சேர்த்து தினம் 2-தடவை 3-விராகனிடை வீதம் பசும் நெய்யில் சாப்பிட பித்தஞ் சமனமாகும்.

## இஞ்சிச்சூரணம்.

தோலைநீக்கிநறுக்கின இஞ்சிசேர்-4, சீரகம்சேர்-1, இவைகளை எலுமிச்சம்பழச் சாறு கரிப்பான் சாறு புளியாரைச் சாறு கரும்புச்சாறு இவைகளில் ஒவ்வொன்றிலும் ஊறவை

த்து நிழலில் உலர்த்தி அத்துடன் ($\frac{1}{2}$) பலம்மிளகையும், (வ) பலம் கிராம்பையும், சேர்த்துச் சூரணித்து தேவையான சீனியும் நெய்யும் சேர்த்து தினம் 2-தடவை பாக்களவு சாப்பிட்டுவர பித்தவாயு, பித்தகாங்கை, அரோசிகம், அன்னத்துவேஷம், குன்மம் முதலிய பலமான ரோகங்கள் குணமாகும்.

## தாதுபுஷ்டிச் சூரணம்.

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த ஜாதிக்காய் | சேர் | 1 |
| நீர்முள்ளிவிதை | ,, | 2 |
| இஸ்கோல்விதை | ,, | 2 |
| சீனாகற்கண்டு | ,, | 6 |

இவைகள் யெல்லாம் சூரணித்துச் சேர்த்து திரிகடிவீதம் தினம் 2-தடவைச் சாப்பிட்டுவர தாதுபுஷ்டி உண்டாகும், பலம்வரும்.

# சூரணவகைபரணி
## முற்றிற்று.

அநுபோகவயித்திய பிரம்மரகசியம் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, பாகம்வரை அச்சிட்டு விற்பனைசெய்து வருகிறோம், 5-ம் பாகம், 6-ம் பாகம் 7-ம் பாகங்களில் அநேக அற்புத முறைகளும், கடைசி 8-ம் பாக முழுமையும் ஒவ்வொரு மருந்துகள் சுத்திசெய்யும் பாகமும் இன்னயின்ன நோயைக் கண்டிக்குமென்றும் விவரமாக சொல்லப்பட்டிருக்கிறது.

உ

தேவிசகாயம்.

# மூன்றாவது

# லேகியவகைபாரணி.

## ராஜமார்த்தாண்ட லேகியம்.

| | |
|---|---|
| ஏலம் | திப்பிலிமூலம் |
| கிராம்பு | ஜாதிக்காய் |
| பெருங்காயம் | சிறுதேக்கு |
| திப்பிலி | முத்தக்காசு |

இவைகள் வகைக்கு விராகனிடை-2, சீரகம், கருஞ்சீரகம், சிறுநாகப்பூ வகைக்கு விராகனிடை-3, கூகைநீர் விராகனிடை-4, இவைகளை உலர்த்தி சூரணித்து, சங்கம்வேர் சேர் (கவ) கண்டங்கத்திரிவேர், செவியம் வகைக்குப் பலம்-5, சிற்றாமுட்டி, இருவேலி, கொடிவேலி, சீந்தில், வில்வம், நிலப்பனை இவைகளின்வேர் திப்பிலி மூலம் வகைக்குப்பலம் (2½) இவைகளை இடித்து ஒருமரக்கால் சலத்தில் போட்டுக் காய்ச்சி (ஹு) மரக்காலாக்கின கஷாயத்தில் சீனிசேர் (1½) சேர்த்து பாகுசெய்து, அதில் ஷை சூரணத்தையும் 2-பலம்சுக்குச் சூரணத்தையும், 2-பலம் மிளகுச்சூரணத்தையும்போட்டு, நெய்பலம்-4, தேன்பலம்-4, சேர்த்துக்கிண்டி, லேகியமாக்கி தினம் 2-தடவை பாக்களவு (48) நாள் சாப்பிட, கபரோகம் (96) வாதரோகம் (80) குன்மம் (8) விக்கல் (5) பீநிசம் (18) சன்னி (13) சுரம் (64) உப்பிசம், செரியாமை, நெஞ்சி எரிவு பித்தம் (40) வாந்தி (5) அக்கினிமந்தம் முதலிய மஹாகொடிய ரோகங்கள் குணமாகும்.

## வில்வாதி லேகியம்.

பட்டைநீக்கின வில்வவேர் சேர் - 3, இடித்து 4 - மரக்கால் ஜலத்தில் போட்டு எரித்து ஒருமரக்காலாக்கின கஷா

யத்தில் நாலுபலம் சீனியைக்கரைத்து பாகுசெய்து, அதில் ஏலம், கிராம்பு, சுக்கு, தாளிசப்பத்திரி, சிறுநாகப்பூ, வகைக்கு விராகனிடை-5, சாதிக்காய், லவங்கப்பட்டை, வகைக்குவிராகனிடை-2½, திப்பிலி, செவ்வியம், மிளகு, வகைக்குப் பலம்-4, இவைகளை உலர்த்திச் சூரணித்துப்போட்டு, தேன் பலம்-2½, நெய்பலம்-2½, விட்டு லேகியமாக்கிதினம்2-தடவை பாக்களவுச் சாப்பிட்டுவர குன்மம் (8) காசம் (5) கிரகணி (11) அதிசாரம் வாந்தி (5) பித்தம் (40) இருமல், ஈளை, விக்கல் (5) நெஞ்செரிவு தேகஎரிவு நீர்கட்டு, விஷபாண்டு, உப்பிசம், மலக்கட்டு முதலிய மஹா பயங்கரமான ரோகங்கள் குணமாகும்.

## கூழ்பாண்ட லேகியம்.

| | | |
|---|---|---|
| பெரும்பூசினிக்காய்ச்சாறு | படி | கூ |
| எலுமிச்சம்பழச்சாறு | ,, | கஉ |
| தாழைவிழுதுச்சாறு | ,, | கஉ |
| தென்னம்பூச்சாறு | ,, | கஉ |
| பசும்பால் | ,, | கங |

இவைகளைச் சேர்த்து அதில் 2-சேர் சீனியைப்போட்டு பாகுசெய்து அதில் அதிமதுரம், தாளிசப்பத்திரி, சீரகம், கோஷ்டம், மல்லி, மாசிக்காய், மிளகு, ஏலம், சாதிக்காய், சாதிப்பத்திரி, வகைக்கு விராகனிடை-'5, உலர்த்திச் சூரணித்துப்போட்டு நெய் படி-ஒ, தேன் படி-முக்கால், விட்டு லேகியமாக்கி தினம் 2-தடவை, 5-விராகனிடை வீதம் சாப்பிட்டுவர அஸ்திசுரம், அஸ்திவெட்டை, சோகை (9) காமாலை (13) பிரமியம் (20) நீர்சுருக்கு, உஷ்ணரோகங்கள், வெள்ளை விழுதல் முதலிய மஹாபலமான ரோகங்கள் தீரும், விந்தூறும், தேகம் புஷ்டிக்கும், பத்தியம் புளி, புகையிலை, ஸ்திரீபோகம் நீக்கவும்

## ராஜசிந்தாதி லேகியம்.

| | | |
|---|---|---|
| புளித்தமோர் | படி | 3 |
| நாலுமாதத்திபகாடி | ,, | 3 |

இவைகளைச் சேர்த்து அதில் 2-சேர் இடித்த புளியிலே 1½-சேர் துருப்பிடித்த இரும்பு இவைகளைப்போட்டு எரித்து எட்டில் ஒரு பாகமாகும்படி காய்ச்சி வடித்து, அத்துடன் தென்னம்பூ, இஞ்சி, எலுமிச்சம்பழம், சிறுகீரை, சிறுசெருப்படை, நெரிஞ்சி, கீழ்க்காய் நெல்லி, இவைகளின் சாறு வகைக்குப்படி-வ, கையாந்தகரைச்சாறு படி-½, பசும்பால் படி-1, இவைகளைச் சேர்த்து, அதில் 3-பலம் சினியைக்கரைத்து பாகு செய்து அதில் ஏலம், கிராம்பு, லவங்கப்பட்டை, தாளிசப்பத்திரி, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், ஓமம், கோஷ்டம், சடாமாஞ்சில், சீரகம், வால்மிளகு, ஆனைத்திப்பிலி வகைக்குப் பலம்-வ, இவைகளை இளவறுப்பாய் வறுத்துச் சூரணித்துச்சேர்த்து தேன் படி-வ, நெய்படி-வ, விட்டுக்கிண்டி லேகியமாக்கி தினம் பாக்களவு அந்திசந்திச் சாப்பிட்டுவர பித்தவெட்டை பாண்டு (5) அக்கினிமந்தம், பொருமல், வாயு, கிரகணி (11) சோகை (9) தேக இளைப்பு, தேகவெளுப்பு முதலிய கடூரமான ரோகங் குணமாகும்.

## தூதுளை லேகியம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தூதுளம்பூ | பலம் | ரு | நன்னாரி | பலம் | ந |
| முருங்கைப்பூ | ,, | ரு | நெரிஞ்சிமுள்ளி | ,, | கஉ |
| சதாவேரிக்கிழங்கு | ,, | சஉ | நிலப்பனங்கிழங்கு | ,, | கஉ |

இவைகளைச் சூரணித்து ஒருபடி ஆவின்பாலில் 2-சேர் சினியைப்போட்டுக்காய்ச்சி பாகுசெய்து அதில் ஷை சூரணத்தைப்போட்டு நெய்படி-ஒ, தேன்படி-வஹ,விட்டுக்கிண்டி லேகியமாக்கி தினம் 2-தடவை பாக்களவு கொடுக்க மேகம் (20) பிரமியம் (20) பிரமேகம் (21) எலும்புருக்கி முதலிய மஹா பயங்கரமான ரோகங்கள் குணமாகும்.

## அமிர்தசஞ்சீவி லேகியம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பசும்பால் | படி | ரு | கொடுப்பை | சேர் | கவ |
| இளநீர்ஜலம் | ,, | ரு | சிற்ருமுட்டி | ,, | கவ |
| தாழைவிழுது | சேர் | கவ | சிறுபுள்ளடி | ,, | கவ |
| வல்லாரை | ,, | கவ | | | |

இவைகளை இடித்து 20-மரக்கால் ஜலத்தில்போட்டு எரித்து ஒருபடியாக்கின கஷாயமும் ஒன்றாகச்சேர்த்து, அதில்மேல்தோல் நீக்கின (2½) சேர் இஞ்சியை மைபோலரைத்துக் கரைத்து மறுபடியும் எரித்து ஒருபடியாக வற்றவைத்து அத்துடன் சீனி சேர்-2, கற்கண்டு சேர்-2, சேர்த்து பாகுசெய்து அதில் கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், ஏலம், கிரும்பு, ஜாதிக்காய், வால்மிளகு, கோஷ்டம், சீரகம், கருஞ்சீரகம், அக்கிராகாரம், சிவதைவேர், ஓமம், நறுக்குமூலம், சுக்கு, மிளகு, திப்பிலி, அறத்தை, ஜாதிப்பத்திரி, தாளிசப்பத்திரி, அதிவிடையம் வகைக்கு விராகனிடை-10. இவைகளை இளவறுப்பாய் வறுத்துச் சூரணித்து வில்வப்பூ, சுத்திசெய்த பறங்கிப்பட்டை, வகைக்குப் பலம்-4, பேரீச்சம்பழம், அன்னபேதி, பெருங்காயம், திராட்சப்பழம், கூகைநீர், வகைக்குப்பலம்-1, பச்சைகற்பூரம், கோரோஜனை, குங்குமப்பூ, கஸ்தூரி, அபினி வகைக்கு விராகனிடை-1, இவைகளின் சூரணத்தையும், தேற்றாவிதை பலம்-1, பசும்பாலில் ஊறவைத்து அரைத்து அதையும், சீந்திற்சர்க்கரை பலம்-8, நெய் சேர்-2, இவைகளையும் போட்டுக்கிண்டி பதத்திலிறக்கி, தேன் சேர்-2, விட்டுப்பிசைந்து ஒரு தகரடப்பாவில் வைத்துக்கொண்டு தினம் பாக்கு அளவு சாப்பிட்டுவர மேகம்-20, அஸ்திசுரம் அஸ்திகாங்கை சீதரத்தம்விழுதல் காமாலை-13, வாயுபாண்டு-5, சோகை-9, கிரகணி-11, முதலிய சகல கரோரோகங்கள் குணமாகும்.

---

## தக்ஷிணாமூர்த்தி லேகியம்.

ஒருபலம் சேங்கொட்டை நெறுக்கி ஒருபடி பசும்நெய்யில் போட்டுக் காய்ச்சி வடித்து அதில் அமுக்கிராவேர் சங்கம்வேர் மூக்கரட்டிவேர் கொடிவேலிவேர் இவைகளின் சூரணம் வகைக்குப் பலம்-2, கோதுமைமாவு படி-வ, சீனிபலம்-5, சேர்த்து செவ்வையாய் மிஸ்ரித்து தினம் காலையில் பாக்களவு பத்துநாள் சாப்பிட சூலை 18-ங் குணமாகும். பத்தியம் உப்பில்லாமை.

## வச்சிரவல்லி லேகியம்.

| | |
|---|---|
| சித்தரத்தை | தாளிசப்பத்திரி |
| திப்பிலி | அக்கிராகாரம் |

இவைகள் வகைக்குப் பலம்-2, கண்டங்கத்திரிவேர் பலம்-8, இவைகளை இளவறுப்பாய் வறுத்துச் சூரணித்து ($1\frac{1}{2}$) சேர் சீனியை (வ) படி பாலிலிட்டுப் பாகுசெய்து அதில் ஷை. சூரணத்தைப்போட்டு நெய் தேன் வகைக்குப் படி (வ) விட்டு லேகியமாக்கி பாக்களவு தினம் 2-தடவைச் சாப்பிட்டுவர ஈளை இருமல் சகல கபரோகங்கள் தீரும்.

---

## அருணாசல லேகியம்.

| | |
|---|---|
| பறங்கிப்பட்டை | அமுக்கிருக்கிழங்கு |
| சங்கம்வேர் | சித்திரமூலம்வேர்பட்டை |

இவைகள் வகைக்குப் பலம்-6, ஏலம் சீரகம் சுக்கு மிளகு திப்பிலி வகைக்குப் பலம்-1, இவைகளைச் சூரணித்து 16-பலம் சீனியுடன் தேவையான பசும்பாலைச்சேர்த்து பாகுசெய்து அதில் ஷ்டி சூரணத்தையும், தேன்பலம் 5-ம், நெய் பலம் 15-ம், சேர்த்து லேகியமாக்கி தினம் 2-தடவை பாக்களவு சாப்பிட்டுவர, மேகவாயு மேகசூலை மேகஊறல் மேகதடிப்பு மேககாங்கை முதலிய சகல மேகரோகங்கள் தீரும்.

---

## தாதுபுஷ்டி லேகியம்.

| | | |
|---|---|---|
| நீர்முள்விதை | பலம் | 4 |
| எள்ளு | ,, | 1 |
| கடலைமாவு | ,, | 2 |
| ஜாதிக்காய் | விராகனிடை | 1 |
| ஜாதிப்பத்திரி | ,, | 1 |
| கிராம்பு | ,, | 1 |
| புரசன்பிசின் | ,, | 3 |
| கிலக்கடம்பு | ,, | 2 |

இவைகளைச் சூரணித்து ஒரு முற்றின தேங்காயில்செ லுத்தி வாயைமூடி 3-விரற்கடை கனத்தில் அதற்கு சாணி யால் கவசஞ் செய்து புடம்போட்டு தேங்காய் வெடித்த வு டனே எடுத்து அதிலுள்ள மருந்தையும், 5-பலம் வெல்லமு ம்சேர்த்து லேகியமாக்கி தினம் 2-தடவை பாக்களவுச் சா ப்பிட்டுவர வீரியவிர்த்தியுண்டாகும், இடுப்புவலிதீரும், இது வெகு நல்லமருந்து.

## க ந் த க லே கி ய ம்.

சுத்திசெய்த ஒருபலம் கந்தகத்தை உருக்கிவெள்ளை அ ம்மான் பச்சையரிசிச் சாற்றில் வார்த்து எடுத்துச் சூரணித் து அத்துடன் சமமாக கற்கண்டு பொடியைச்சேர்த்து, பிற கு 20-ரஸ்தாளிபழச்சாறு, தேன் சேர்-வ, நெய் சேர்-வ, இ வைகளில் சேர்த்து லேகியபதமாக வரும்வரையில் சூரியபுட ம்வைத்து கழற்சிக்காயளவு தினம் 2-தடவைச் சாப்பிட்டுவ ர, மேகவாயு மேகரணம் மேகஊறல் மேகக்கரப்பான் மேககி ரந்தி முதலிய பயங்கரமான ரோகங்கள் குணமாகும் இச் சாபத்தியம்.

## பூர்ணாதி லேகியம்.

| | |
|---|---|
| சுத்தித்தகஞ்சா | சிறுநாகப்பூ |
| லவங்கப்பத்திரி | சீரகம் |
| சிறுலவங்கப்பட்டை | அதிமதுரம் |
| கசகசா | சுக்கு |
| சோம்பு | திப்பிலி |
| ஏலம் | தாளிசப்பத்திரி |
| தும்பராஷ்டகம் | கிரும்பு |

இவைகள் வகைக்குப் பலம்-5, சாதிக்காய் சாதிப்பத் திரி வகைக்குப் பலம்-2½, மிளகு தேன் வகைக்குப் பலம்-10, நெய் பலம்-20, சர்க்கரை சேர்-15, எலுமிச்சம்பழம் அல்லது புளிப்பு நார்த்தம்பழரசம் படி-ஷ, சூரணிக்கிற பதார்த்தங் களை இளவறுப்பாய் வறுத்துச் சூரணித்து பழச்சாற்றில் சர் க்கரைசேர்த்து பாகுசெய்து அதில் ஷை சூரணத்தைப்போ ட்டுக்கிளறி தேனையும் நெய்யையும் விட்டு மறுபடியும் கிளறி

ஒரு வாயகன்றஜாடியில்போட்டு மூடிவைத்துக்கொண்டு பெரியவர்களுக்கு பாக்களவும், சிறியவர்களுக்கு குன்றிமணி அளவும் கொடுக்க மாந்தம் அஜீரணம் உஷ்ணபேதி வயிற்றிரைச்சல் மந்தம் பசியில்லாமை முதலிய பற்பல ரோகங்கள் குணமாகும் தாதுபுஷ்டி யுண்டாகும்.

☞ குழந்தைகளுக்குக் கொடுப்பதரிது.

## பூரணசந்திரோதய லேகியம்.

ஒரு சேர் மேல் தோல் நீக்கின இஞ்சியை கத்தியால் பில்லைகளாக்கி பசும் நெய்யில் பொன்னிறமாய் வறுத்துச் சூரணித்து அத்துடன் சுக்கு மிளகு திப்பிலி கோஷ்டம் அதிமதுரம் சீரகம் மல்லி ஏலம் சாதிக்காய் சாதிப்பத்திரி வால்மிளகு கிராம்பு வகைக்கு விராகனிடை-5, இவைகளை இளவறுப்பாய் வறுத்து சூரணித்துச் சேர்த்துவைத்துக்கொண்டு ஒருசேர் சீனைகற்கண்டை பசும்பாலில்போட்டு பாகுசெய்து அதில் மேற்படி சூரணத்தைப்போட்டு தேன் சேர்-வ, நெய் சேர்-1, விட்டுக்கிண்டி செவ்வையாய் மிஸ்ரித்து பதத்தில் இறக்கி ஒருபீங்கான் அல்லது தகரடப்பாவில் போட்டு வைத்துக்கொண்டு தினம் 2-தடவை பாக்களவுச் சாப்பிட்டுவர உஷ்ணவாயு அஜீரணம் அக்கினிமந்தம் வயிற்றுவலி குன்மம் காசம் முதலிய பற்பல பலமானரோகங்கள் குணமாகும்.

## கதலிலேகியம்.

100-ரஸ்தாளி பழத்துடன் பெரும் உமியைச் சேர்த்துப் பிசைந்து இளநீர் ஜலம்போல் வருவதை எடுத்து அத்துடன் சீரகம் பலம்-1, கசகசா பலம்-1, இவைகளை இளவறுப்பாய் வறுத்துச் சூரணித்துப் பொடியையும் சீனிசேர்-1, சாதிக்காய்த்தூள் ஜாதிப்பத்திரித்தூள் வகைக்குப் பலம்-½, இவைகளையும் சேர்த்து 15-நாள் சூரியபுடம்போட்டு லேகியபதத்தில் எடுத்துவைத்துக்கொண்டு 5-விராகனிடை வீதம் தினம் 2-தடவைச் சாப்பிட்டுவர உஷ்ணவாயு பித்தவாயு அரோசிகம் அன்னத்துவேஷம் குணமாகும்.

## கண்டத்திப்பிலி லேகியம்.

சுக்கு கண்டத்திப்பிலி வகைக்குப் பலம்-1, ஓமம் பலம்-2, இவைகளைச் சூரணித்து 4-பலம் பனைவெல்லத்தை ஜலத்தில்போட்டு பாகுசெய்து அதில்சேர்த்து நெய்பலம்-1,விட்டு லேகியமாக்கி தினம் பாக்களவு 2-தடவை சாப்பிட்டுவர வாயு அஜீரணம் மந்தாக்கினி மலபந்தம் குணமாகும்.

---

## இஞ்சி லேகியம்.

| | |
|---|---|
| இஞ்சி | முள்ளங்கிழங்கு |
| கண்டங்கத்திரி | எலுமிச்சம்பழம் |
| நெரிஞ்சி | |

இவைகளின் சாறு வகைக்குப் படி-$\frac{1}{2}$, பசும்பால் படி-$\frac{1}{4}$, இவைகளைச் சேர்த்து அத்துடன் 4-பலம் சீனியைக்கரைத்து பாகுசெய்து அதில் சுக்கு மிளகு திப்பிலி ஏலம் கிராம்பு சீரகம் வாய்விளங்கம் தாளிசபத்திரி வகைக்கு விராகனிடை-5, சூரணித்துப்போட்டு தேன் படி-$\frac{1}{4}$, நெய் படி-$\frac{1}{4}$, விட்டு லேகியமாக்கி தினம் 2-தடவை பாக்களவு 48-நாள் சாப்பிட்டுவர வாந்தி-5, சூலை-18, வாதம்-80, பித்தம்-40, இசிவு குன்மம்-8, அரோசிகம் பொருமல் கடுப்பு மயக்கம் கபாலக்குத்து பித்தயெரிவு அன்னத்துவேஷம் தீரும், இச்சாபத்தியம்.

# லேகியவகைபாணி

## முற்றிற்று.

---

அனுபோகவயித்திய பிரம்மரகசியம் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, பாகம்வரை அச்சிட்டு விற்பனைசெய்து வருகிறோம், 5-ம் பாகம் 6-ம் பாகம் 7-ம் பாகங்களில் அநேக அற்புத முறைகளும் கடைசி 8-ம் பாக முழுமையும் ஒவ்வொரு மருந்துகள் சுத்திசெய்யும் பாகமும் இன்னயின்ன நோயைக் கண்டிக்குமென்றும் விவரமாக சொல்லப்பட்டிருக்கிறது.

உ

தேவிசகாயம்.

---

# நாலாவது

# கிருதவகைபரணி.

## மாணிக்கக் கிருதம்.

| | | |
|---|---|---|
| தேங்காய்ப்பால் | படி | 2 |
| பொடுதலைச்சாறு | ,, | 2 |

இதுகளில் 16-படி ஆற்று ஜலத்தை எட்டிலொன்றாகும் படி காய்ச்சி சேர்த்து எரித்து நெய்யை வடித்து ஒருவிராகனிடை வீதம் தினம் காலை மாலை கொடுத்துவர கருநாக்குச் சூலை மேல்வாப்புண் உண்ணாக்கை அரிக்கும் கிரந்தி பல்லீறை அரித்தூத்தின்னும் கிரந்தி நாக்கு அரிப்பு நாக்குப்புண் முதலிய மஹா கொடியரோகங்கள் குணமாகும்.

## புளியாரை கிருதம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| புளியாரைச்சாறு | படி | உ | தயிர்தண்ணீர் | படி | ஒ |
| பசும்நெய் | ,, | ஒ | வெள்ளாட்டுப்பால் | ,, | ஒ |

இவைகளைச் சேர்த்து அதில் சுக்கு மிளகு திப்பிலி வில்வப்பிஞ்சு வாலுழுவை அரிசி காட்டாத்திப்பூ கோரைக்கிழங்கு சீரகம் அதிவிடையம் இலவம்பிசின் மல்லி நெய்தற்கிழங்கு விலாமிச்சு வேர் சிற்றாமுட்டி ஓமம் இஞ்சி பொன்முசட்டை கண்டந்திப்பிலி மாதுளம்பிஞ்சி வகைக்குவிராகனிடை-2½, ஜலத்தால் அரைத்துக் கரைத்து எரித்து பதத்தில் இறக்கி தினம் 2-தடவை ஒரு விராகனிடைவீதம் கொடுத்துவர குன்மம்-8, கிராணி-11, வயிற்றுவலி சுரம் தாபம் அரோசிகம் சோகை-9, பிலீகம்-4, விவர்வியாதி மூலம்-8, ஆமக்கட்டி

கள் கிருமிரோகம் முதலிய கரோ ரோகங்கள் குணமாகும். பலம் தேஜசு தீபனம் இவைகள் உண்டாகும்.

## கூழ்ப்பாண்ட கிருதம்.

| | | |
|---|---|---|
| பெரும்பூசினிக்காய்ச்சாறு | படி | 1 |
| செவ்விளநீர்ஜலம் | ,, | ½ |
| குமரிச்சாறு | ,, | ½ |
| தென்னம்பூச்சாறு | ,, | ½ |
| தாழைவிழுதுச்சாறு | ,, | ½ |
| பசும்பால் | ,, | 1 |
| நெய் | ,, | 1 |

இவைகளைச்சேர்த்து அதில் குரோசாணி ஓமம் மல்லி கற்கடகசிங்கி காட்டாத்திப்பூ சாதிக்காய் சாதிப்பத்திரி மாசிக்காய் கடுக்காய் தானிக்காய் நெல்லிவற்றல் வால்மிளகு சீரகம் ஏலம் வகைக்கு விராகனிடை-$1\frac{1}{2}$, பசும்பாலால் அரைத்து கரைத்து எரித்து வடித்து ஒருபலம் கற்கண்டைப்பொடித்துப்போட்டு வைத்துக்கொண்டு 3-விராகனிடை கிருதத்தில் கொஞ்சம் அப்பிரேகசெந்தூரத்தை வைத்துக்கொடுக்க மேகம்-20, பிரமேகம்-21, காமாலை-13, கிரகணி-11, பித்தம்-40, உஷ்ணம் கை கால் எரிவு நீர்குத்து அஸ்திவெட்டை அஸ்திகாங்கை எலும்புருக்கி முதலிய பயங்கரமான ரோகங்கள் அதிசீக்கிரத்தில் குணமாகும்.

## திரிலோக கிருதம்.

| | | |
|---|---|---|
| பெரும்பூசினிக்காய்ச்சாறு | படி | ½ |
| நெல்லிக்காய்ச்சாறு | ,, | ½ |
| குழிமிட்டான்கிழங்குச்சாறு | ,, | ½ |
| கரும்புச்சாறு | ,, | ½ |
| சதாவேரிக்கிழங்குச்சாறு | குருணி | 5 |
| நெய் | படி | 2 |

இவைகளைச் சேர்த்து அதில் இந்துப்பு ஓமம் சிறுதேக்கு கோரைக்கிழங்கு கோஷ்டம் சந்தணம் சுக்கு மிளகு திப்

பிலி கடுக்காய் தானிக்காய் நெல்லிவற்றல் வெட்பாலையரிசி மல்லி ஏலம் கிராம்பு லவங்கப்பத்திரி சிறுநாகப்பூ சீரகம் விலாமிச்சுவேர் கூகைநீர் அதிமதுரம் திராக்ஷை பேரீச்சங்காய் வகைக்கு விராகனிடை-$1\frac{1}{2}$, அரைத்து கரைத்து எரித்து வடித்து ஒரு கரண்டிவீதம் தினம் 2-தடவை சாப்பிட்டுவர கிரிச்சரம் நீர்க்கடுப்பு எலும்புருக்கி மேகசுரம் கைகால் எரிவு தீரும், தாதுவிருத்தி தேகபுஷ்டி உண்டாகும்.

## வல்லாரை கிருதம்.

| | | |
|---|---|---|
| வல்லாரைச்சாறு | படி | 2 |
| பொடுதலைச்சாறு | ,, | 2 |
| பொன்னுங்காணிச்சாறு | ,, | 2 |
| எலுமிச்சம்பழச்சாறு | ,, | 2 |
| ஆவின்பால் | ,, | 4 |
| நெய் | ,, | 4 |

இவைகளைச் சேர்த்து அதில் அதிமதுரம் ஏலம் கிராம்பு வால்மிளகு சாதிக்காய் சாதிப்பத்திரி மாசிக்காய் கடுக்காய்ப்பூ வகைக்கு விராகனிடை-4, ஷை பாலால் அரைத்துக் கரைத்து எரித்து வடித்து அதில் 4-பலம் கற்கண்டு பொடியைச் சேர்த்து தினம் 3-விராகனிடை கிருதத்தில் கொஞ்சம் ரஸபஸ்மம் சேர்த்துக்கொடுக்க மேகம்-20, கிரந்தி-9, பிரமியம்-20, குஷ்டம்-18, மேகசூலை சொறி சிரங்கு நாபிநோய் யோனிப்புற்று நீர்க்கடுப்பு முதலிய மஹா கொடியரோகங்கள் குணமாகும்.

## தாதுளை கிருதம்.

| | | |
|---|---|---|
| தாதுளைசமூலம் | பலம் | 100 |
| கண்டங்கத்திரி | ,, | 50 |
| கறிமுள்ளிவேர் | ,, | 50 |

இவைகளை இடித்து 80-படி ஜலத்தில்போட்டு எரித்து 10-படிபாக்கின கஷாயத்தில் பசும்நெய் பால் வகைக்குப் படி-5, இஞ்சிச்சாறு படி-$1\frac{1}{4}$, சேர்த்து அதில் சிறுநாகப்பூ

நன்னாரிவேர் கொடிவேலிவேர் சுக்கு மிளகு திப்பிலி கடுக்காய் தானிக்காய் நெல்லிவற்றல் கோஷ்டம் தாளிசப்பத்திரி வகைக்கு விராகனிடை-5, செவ்வல்லிக்கொடி சடாமாஞ்சில் சிறுகாஞ்சொரிவேர் ஆடாதோடைவேர் அதிமதுரம் சீரகம் தேற்றுவிதை வகைக்குப்பலம்-1¼, கண்டங்கத்திரிவேர் முசுமுசுக்கைவேர் வகைக்குப் பலம்-2½, ஷை பாலால் அரைத்துக் கரைத்து எரித்து வடித்து அதில் தேன்படி-½, கற்கண்டு பலம்-5, சேர்த்து தினம் 2-தடவை 2-விராகனிடை விதம் கொடுக்க ஈளை இருமல் சுவாசம்-5, காசம்-5, பொருமல் இரைப்பு முதலிய கபரோகங்களெல்லாந் தீரும்.

---

## மரத்துவெள்ளை நவநீதம்.

| | | |
|---|---|---|
| நல்லெண்ணெய் | சேர் | ¼ |
| கருநொச்சிச்சாறு | ,, | ¼ |
| பசும்பால் | ,, | ¼ |
| எலுமிச்சம்பழச்சாறு | ,, | ¼ |

இவைகளைச் சேர்த்துக் காய்ச்சி வடித்து அதில்மாத்துவெள்ளை பலம்-1½, கல்நார் பலம்-1, கற்பூரசிலாசத்து பலம்-1, இவைகளைச் சூரணித்துச் சேர்த்து மறுபடியும் எரித்து ஜலத்தில் ஒருதுளிபோட அது முழுகிப்போகும்பதத்தில் இரக்கி ஒருசட்டியில் ஜலத்தை வைத்துக்கொண்டு அதில் ஊற்றிக் கசக்கி ஜலத்தைநீக்கவும், இவ்விதமாய் 4-5-தடவை செய்து அத்துடன் எருமைவெண்ணெய் சேர்-½, சேர்த்து ஜலத்தில் போட்டுக் கசக்கி ஜலத்தைநீக்கி மறுபடியும் புதுஜலத்தைச் சேர்த்துக் கசக்கவும் இவ்விதமாய் 24-தடவைக் கசக்கி எடுத்து தினம் 2-தடவை பாக்களவு கற்கண்டுபொடியில் சாப்பிட உஷ்ணம் வயிற்றிலுள்ள ரணம் நீர்எரிவு நீர் அடைப்பு நீர்த்தாரைப்புண் முதலியவைகள் குணமாகும், இதை தினம் புதுஜலத்தில்போட்டு வைக்கவேண்டியது.

## பேர்ச்செங்காய் கிருதம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கிராம்பு | பலம் | ½ | திப்பிலி | பலம் | ½ |
| சீரகம் | ,, | ½ | ஜாதிக்காய் | ,, | ¼ |
| மிளகு | ,, | ½ | கசகசா | ,, | ¼ |

இவைகளைச் சூரணித்து ஒருபலம்கொட்டைநீக்கினபேர்ச்செங்காயில் செலுத்தி அவைகளை ஒருசேர் பசும்நெய்யில் போட்டு தேன்சேர்-ஹ, விட்டுக்காய்ச்சி எடுத்து தினம் ஒரு பேர்செங்காய்வீதம் சாப்பிட்டுவர உஷ்ணவாயு பித்தவாயு அக்கினிமந்தம் அன்னத்துவேஷம் பாண்டு சோகை முதலியவைகள் குணமாகும், ரத்தத்தை விருத்திக்கும்.

---

## பொன்னுங்காணி கிருதம்.

| | | |
|---|---|---|
| பொன்னுங்காணிச்சாறு | படி | 2 |
| பொற்றலைக்கையாந்தகரைச்சாறு | ,, | 2 |
| எலுமிச்சம்பழச்சாறு | ,, | 2 |
| பசும்நெய் | ,, | 2 |
| பசும்பால் | ,, | 2 |

இவைகளைச்சேர்த்து அதில் அதிமதுரம் பலம்-4, பசும்பாலால் அரைத்துக்கரைத்து எரித்து வடித்து ஒருசீசாவில் போட்டு அதில் சாதிக்காய் சாதிப்பத்திரி கோரோசனை கற்கண்டு வகைக்கு விராகனிடை - 2, சூரணித்துப்போட்டு தினம் காலை மாலை 2-விராகனிடை வீதம் கொடுக்க மூலச்சூடு உஷ்ணரோகங்கள் கைகால் எரிவு தேகயெரிவு மேகம் வாய்நாற்றம் பிரமியங்கள் 20-ங் குணமாகும் கண்கள் குளிர்ச்சியாகும்.

---

## புளியாரைக் கிருதம்.

| | | |
|---|---|---|
| புளியாரைச்சாறு | படி | 2 |
| வள்ளிக்கிழங்குச்சாறு | ,, | 2 |
| பொன்னுங்காணிச்சாறு | ,, | 2 |
| செவ்விளநீர்ஜலம் | ,, | 4 |

| | | |
|---|---|---|
| ஆவின்நெய் | படி | 10 |
| ஆவின்பால் | ,, | 10 |

இவைகளைச் சேர்த்து அதில் சீரகம் மாசிக்காய் அதிமதுரம் வகைக்கு விராகனிடை-8, பசும்பாலால் அரைத்துக்கரைத்து எரித்துவடித்து ஒருசீசாவில்போட்டு அதில் ஏலம் ஜாதிக்காய் ஜாதிப்பத்திரி வகைக்கு விராகனிடை-4, கற்கண்டு பலம்-2, இவைகளைச் சூரணித்துப்போட்டு தினம் 2-தடவை 3-விராகனிடை வீதம் கொடுக்க பித்தவாயு பித்த வெட்டை பித்த எரிவு பித்தமயக்கம் நீர்சுருக்கு வாந்தி அரோசகம் குணமாகும்.

## கி ரு த வ கை ப ா ணி

### மு ற் றி ற் று.

இவ்வளவு வெள்ளியநடையாய் அச்சிட்டு பயிரங்கப் படுத்திய அனுபோக வயித்தியத்திற்கு சரக்குசுத்திகள் சொல்லவில்லையென கவலைப்படவேண்டாம் இதற்கு முதற்பாகத்திலும் எட்டாம்பாகத்திலும் சுத்திகள் விவரமாக தெரிந்துக்கொள்ளலாம்.

இனி ஏழாம்பாகத்தில்
அற்புதமுறைகள் சொல்லப்படும்.

உ

தேவிசகாயம்.

# ஐந்தாவது

# பஸ்மவகைபரணி.

## ரஜதபஸ்மம்.

அரிதாளம் பலம்-1, கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாற்றால் ஒருசாமம் அரைத்து சுத்திசெய்த வெள்ளித்தகடு பலம் 3-க்கு கவசமிட்டு சீலைமண் செய்து 30-எருவில் புடம் போடவும் இவ்விதமாகவே 14-புடம்போட்டெடுத்துபார்க்க மகாவெண்மையான பஸ்மமாயிருக்கும் இதை அநுபானத்திலிட மேகம் பிரமேகம் கிரிச்சரம் மூத்திரரோகம் அஸ்திசுரம் முதலிய அநேக பயங்கரமான ரோகங்கள் குணமாகும்.

சுத்திசெய்த வெள்ளியைத் தகடுதட்டி ரசபஸ்மம் வங்கபஸ்மம் நாகபஸ்மம் இம்மூன்றையும் கூட்டி உமிழ்நீர்யிட்டு மைபோலரைத்து வெள்ளிக்குச் சமயிடைச்சேர்த்து ரவியில் உலர்த்தி சீலைமண்செய்து சுண்ணும்புக்குள் வைத்து வராகல் புடம்போட்டு எடுத்துப்பார்க்க பஸ்மமாயிருக்கும் அதில் ஒரு குன்றிமணியிடை தேனிலிட கல்லடைப்பு சதையடைப்பு கிரிச்சரம் காசம் இரைப்பு லிங்கப்புற்று யோனிப்புற்று கிரந்தி மேகம் முதலிய பயங்கரமான ரோகங்கள் குணமாகும்.

## தாம்பிர பஸ்மம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அண்டத்தோல் | பலம் | 2 | வெங்காரம் | பலம் | 2 |
| வீரம் | ,, | 2 | நவக்ஷாரம் | ,, | 2 |
| பூநீர் | ,, | 2 | பூரம் | ,, | 2 |
| சீனகாரம் | ,, | 2 | வெடிஉப்பு | ,, | 2 |

இவைகளை ஒருபடி எலுமிச்சம்பழச்சாற்றால் அரைத்து பில்லைத்தட்டி உலர்த்தி, பத்துபலம் நாகூர்செலவியை குகையில்போட்டு உருக்கி அதின்முகத்தில் ஒவ்வொருபில்லைக்கொடுத்து மறுபடியும் உருக்கி 2-படி எலுமிச்சம்பழச்சாறும் ½-படி முலைப்பாலும்சேர்த்து ஒவ்வொரு துளியாகவிட்டு சுருக்குக்கொடுத்து தாளகம்பலம்-2, வெங்காரம் நவக்ஷாரம்வகைக்குப் பலம்-5, இவைகள் மூன்றும் கல்வத்திலிட்டு திருக்கள்ளிப்பால் படி-2, பூநீர் பூரம் வெடியுப்பு சீனாகாரம் நவக்ஷாரம் வீரம் கல்லுப்பு வகைக்கு விராகனிடை-2, இவைகள் எட்டும் மூன்றுநாள் சேர்த்துவைத்து அதின்ஜலத்தால் 8-நாள் அரைத்து பில்லைத்தட்டி உலர்த்தி முதலில்கொடுத்தபடி ஒவ்வொருபில்லையாக உருக்கின முகத்தில்கொடுக்க வெங்கலம்போலாகும். இந்த தாம்பிரம் ரசம் வீரம் கற்பூரம் வெள்ளுநாம் வகைக்குப்பலம்-4, வெள்ளைப்பாஷாணம்பலம்-1, இவைகள் ஆறும் வெள்ளெருக்கம்பாலால் 8-ஜாமம் அரைத்து பில்லைதட்டி உலர்த்தி ஒரு சிறு கலசத்தில்போட்டு ஒரு ஓட்டால் வாயைமூடி ஏழுசீலைமண் வலுவாய்ச்செய்து கஜபுடம்போட பஸ்மமாகும் அதில் ஒரு குன்றிமணியிடை தகுந்த அனுபானத்திலிட மேகம்-20, குஷ்டம்-18, பிரமேகம்-21, க்ஷயம்-4, சூலை-18, பவுத்திரம்-15, குன்மம்-8, வாதம் 30, பித்தம்-40, சிலேஷ்மம்-20, கபரோகங்கள்-96, முதலிய மஹா பயங்கரமான ரோகங்கள் குணமாகும். பத்தியம் அன்னமும் பசும்பாலும் சாப்பிடவும்.

## வங்கபஸ்மம்.

மனோசிலையை வெற்றிலைச்சாற்றால் அரைத்து அதற்கு சமமாக சுத்திசெய்த ஈயத்தகடுகளுக்கு கவசமிட்டு ஓட்டிலிட்டுமேல் ஓட்டால் மூடி சீலைமண்செய்து கஜபுடம்போடவும் இவ்விதமாகவே 32-புடங்கள்போட்டு எடுத்துப்பார்க்க வெகுவெண்மையான பஸ்மமாயிருக்கும் இதை அனுபானத்திலிட மூர்ச்சை அபஸ்மாரம் கபரோகம் அதிசாரம் கிரகணி பேதி முதலிய அநேக பலமான ரோகங்கள் குணமாகும்.

## கருவங்கபஸ்மம்.

சுத்திசெய்த 3-சேர் காரீபத்தை உருக்கி 8-சேர் சங்க இலைச்சாற்றில் 21-தடவை வார்த்து பிறகு அதை ஒரு கம்பியாக்கி கத்திபால் சீவினபொடியை தாமரை இலைச்சாற்றால் 4-ஜாமம் அரைத்து கல்வத்தோடு ரவியில் வைத்து உலர்த்தி பிறகு அதை ஒரு சட்டியில்போட்டு ஆகாச தாமரை யிலையை கொஞ்சங்கொஞ்சமாகப் போட்டு வறுக்க ஈயத்தை பொடியாக்கிவிடும், அந்தப்பொடியும் அதற்குச் சரியானயிடை கோழிக்குஞ்சு பொரித்தமுட்டையின் உள்தோலைநீக்கி மேலோட்டைச் சேர்த்துச் சூரணித்து ஒரு குகையில்போட்டு ஓட்டால் வாயைமூடி 7 - சீலைமண் வலுவாய்ச் செய்து உலர்த்தி உலையில்வைத்து துருத்தியால் 3-4-மூட்டம் போட்டு குகையை உருகுஞ்சமயத்தில் எடுத்து ஆற்றி குகையை உடைத்துப்பார்க்க பஸ்மமாயிருக்கும் அதில் ½-குன்றிமணியிடை நெய்யில் தினம் காலைமாலை 3-4-நாள்கொடுத்து பிறகு 10-நாள் பொறுத்து 3-4-நாள் கொடுக்க மூர்ச்சை-4, அபஸ்மாரம-4, பயித்தியம்-6, முதலிய மஹா கொடிய ரோகங்கள் குணமாகும்.

---

## ரசபஸ்மம்.

ஒரு மண்பாண்டத்தில் ஒருபலம் கந்தகத்தைப்போட்டு காடாக்கினியாய் எரித்து கந்தகம் உருகும் சமயத்தில் 7-பலம் ரசத்தைவிட்டு துளாவிக்கொண்டிருந்தால் ரசம் கந்தகத்துடன் கலந்து கறுத்துத் தூளாகிவிடும் பிறகு வேறொரு பாண்டத்தில் பாதிக்கு செங்கல்பொடியைப்போட்டு அதின்மேல் 8 - ஆழாக்கு கறி உப்பைக்கொட்டி அதின்மேல் ரசகந்தியை வைத்து வேறொரு பாண்டத்தால் மூடி பொருந்துவாய்க்குக் களிமண் தடவி ஏழுசீலைமண் வலுவாய்ச்செய்து காடாக்கினியாய் நாலுஜாமமெரித்துக் குளிரவைத்து உடைத்துப் பார்த்தால் மேல்பாண்டத்தில் ரசபஸ்மம் பதங்கித்திருக்கும். அதை எடுத்து ½-பணவிடை வீதம் அனுபானத்தில் சுரம்-64, மாந்தம்-8, காசம்-5, சன்னி- 3, நேத்திரரோகம்-94, அதிசாரம்-6, மேகம்-21, முதலிய பற்பல கரேரோகங்கள் குணமாகும்.

## வேறு ரசபஸ்மம்.

காட்டுள்ளியும் கெந்தகமும் ஓர்நிறையாய் அரைத்து பில்லைதட்டிக் கலசத்திலிட்டுத் தயிலமிறக்கி வாலை ரசத்தில் விட்டு ரவியில்வைக்க நீறும் அதை அந்தத் தயிலத்தாலாட்டி பில்லைசெய்துகொண்டு நன்றாய்வெந்த செங்கல்லைப் பாக்குப் போலுடைத்து ஒரு குண்டு சட்டியில் அரைவாசி போட்டு அதின்மேலொருபடி உப்புக்கொட்டி பரப்பி அதில்மேற்படி பில்லைவைத்து மூடி ஏழு சீலைமண்செய்து அடுப்பேற்றிக் காடாக்கினியாய் மூன்று சாமம் எரித்து ஆற்றி யெடுக்கப் பதங்கித்திருக்கும் அதையெடுத்து பணவிடை பணவெல்லம் முதலான அனுபானங்களில் 7 நாட்கொள்ள குஷ்டம் குறைநோய் பவுத்திரம் கழலை காமாலை விப்புருதி வீக்கம் வெள்ளை படருதல் சூலை அரையாப்பு யோனிப்புற்று மூலமுளை கண்டமாலை கிரந்தித்தடிப்பு வெள்ளை கருங்கரப்பன் வண்டுகடி மேகம் வாயு குன்மம் தீரும் வாய்வேகாது.

ஒருபலஞ்சூதத்தை முந்திரிக்கொட்டைத் தயிலத்தாலும் விடத்தீஞ்சான் மூலிச்சாற்றாலும் மால்தேவிக்கிழங்குச் சாற்றாலும் வெள்ளெருக்கம் பாலாலும் வகைக்கொரு சாமமாட்டி பில்லைசெய்து முன்போலெரித்து பதங்கித்து பணவிடை வெல்லம் முதலான அனுபானங்களிலிட மேற்காட்டிய வியாதிகள் தீரும் வாய்வேகாது.

பன்னிரண்டு விராகனிடை சுத்திசெய்த கெந்தகத்தையும் 80-விராகனிடை இரசத்தையும் இரச செந்தூரத்திற் சொல்லிபடி ஒன்றாய்த் தொந்திப்பொடித்து முன்போற் பதங்கித்துக்கொண்டு நாலுவிராகனிடை ஒமத்தைப் பொரித்து அதற்கு நிகர் கருப்புக்கட்டியும் 8-விராகனிடை பற்பமும் இதனடியிற் சொல்லியிருக்கிற கெந்தகபற்பமுஞ்சேர்த்து மெழுகுபோலாட்டிப் 16-மாத்திரைசெய்து 8-நாளந்திசந்தி கொள்ள மேற்சொல்லிய வியாதிகள் தீரும்.

## கெந்தகபஸ்மம்.

பூநீறும் வெடியுப்பும் ஓர்நிறையாய்ச் சுத்தஜெலம்விட்டு அரைத்து பில்லைசெய்து காயவைத்து ஓட்டிலிட்டு அதற்குக் கீழும்மேலும் இரண்டுவிரற்கடை உவர்மண்போட்டு இரண்டு

சாமமெரிக்கச்சுண்ணமாகும் அதற்குப்பாதி சாரஞ்சேர்த்து மெல்லியசீலையால்முடிந்து ஒருபீங்கானில்தொங்கவிட்டுமூடி பூமியிற்புதைத்து ஒருமண்டலஞ்சென் றெடுக்கச் செயநீரிறங்கும் அதைச் சீசாவிலடைத்துக்கொண்டு கெந்தகமுஞ்சீனமும் ஓர்நிறையாய்க் கல்வத்திலிட்டு மேற்படி செயநீரா லரைத்து பில்லைசெய்து காயவைத்து சிறசின்னிலையை அரைத்து குகைசெய்து அதில் பில்லையை வைத்துமூடிக் காயவைத்து அதற்குமேல் ஏழுசீலைமண்செய்து காயவைத்து அஞ்செருவிற்புடம்போடநீறும் இந்தப்படி தாளகத்தையும் நீற்றி ஷெ பஸ்மமும் ரசபஸ்மமும் வகைக்குப் பணவிடை தேனிலாவது மற்றஅனுபானத்திலாவதுகொள்ள ரசபஸ்மத்திற்சொல்லிய வியாதிகள் தீரும்.

கெந்தகமும் சீனிக்காரமும் ஓர்நிறையாய்ப்பொடித்துக் கலசத்திலிட்டு சிறசின்னிச்சாறுவிட்டுப் பிசறி ரவியிலுலர்த்தி மேலோடுமூடி மூன்றெருவிற் புடம்போடநீறும் அனுபானங்களிலிட ஷெ வியாதிகள் தீரும்.

சுத்திசெய்தகந்தகத்திடை காளானைச்சேர்த் தரைத்து பில்லைசெய்து காயவைத்து ஒட்டிலிட்டுச் சீலைசெய்துகாடைப்புடம்போட நீறும்.

---

## வீரபஸ்மம்.

ஒருபடி பூநீரை நாலுபடி அமுரியிற்கரைத்துத் தெளிவிறுத்து ஒருபாண்டத்தில்விட்டு அதின்வாயிற் சீலையால் ஏடுகட்டி அதின்மேல் அஞ்சுவிராகனிடை வீரக்கட்டியைவைத்து மூடி நீர்வற்றும்வரை தீயெரிக்கப் பஸ்மமாகும் அதை கிரந்திநாயகச்சாற்றால் 12-சாமமெரித்து பில்லைசெய்து காயவைத்து ஷெ பீலையை அரைத்துக் குகைசெய்து அதற்குள் மேற்படிபில்லையைவைத்துமூடி ஒருசட்டியில் நாலுவிரற்கடை மணற்போட்டு அதின்மேல்வைத்து நாலுநாழிகை யெரிக்கச் சிவந்தநிறமான பஸ்மமாயிருக்கும் அதிற்பணவிடை திரிகடிச்சூரணத்தில்வைத்து தேன்விட்டு மத்தித்து மூன்றுவேளை கொடுக்கச் சன்னிதோஷம் கபக்கட்டு வாயு வாதந்தீரும்.

## தாளகபஸ்மம்.

ஒருபலத் தாளகத்தை பெரும்பூசினிக்காயைபிடித்துப் பிழிந்தசாற்றில் இரண்டுசாமம் வேகவைத்தெடுத்துச் சுண்ணாம்புக்கல்லுக்குள்வைத்து நாறுதபாநீற்றியெடுத்து நல்லெண்ணெயி லிரண்டுசாமமெரித்து சாரம பூநீர் சவுட்டுப்புசுண்ணாம்பு கல்லுப்பு சூடன் சீனம் வெடியுப்பு இந்துப்பு வகைக்குப்படி-1, நாலுபடி சிறுநீரிற்கரைத்துத் தெளிவிறுத்து கட்டிக்குச்சுருக்குக்கொடுக்க சுத்தியாகும் மூக்கரைச்சாரணை சமூலம் ஒருதேங்காய்ப்பிரமாணமரைத்து அதற்குநடுவில்கட்டியைப்பொதிந்து சட்டிக்குள்வைத்து மேற்சட்டிமூடி சீலைசெய்து தீபம்போல் நாலுசாமம்எரிக்கப் பஸ்மமாகும் அதில் பணவிடை தேனிற்கொடுக்க க்ஷயம் கபாலசூலை, பெரும்பூசிணிக்காய்ச்சாற்றில் மேகமும், மற்றஅனுபானங்களில் கிரந்திசூலையும் சுரம் குஷ்டமுந்தீரும்.

சுத்திசெய்த ஒருபலத்தாளகத்தை வாழைக்கிழங்குக்குள்வைத்துமூடி ஏழுசீலைமண்செய்து காயவைத்து அன்பதெருவிற் புடம்போட நீறும் அனுபானத்திலிட சிலேத்மரோய் 96-ம், சுரம் அரையாப்பு கிரந்திசூலை குட்டமுந்தீரும்.

சுத்திசெய்த ஒருபலத்தாளகத்திற்கு சுருள்ளிச்சாறு சிவகரந்தைச்சாறு வகைக்குப்படி-1, சுருக்குக்கொடுத்து சிற்றண்டம் பேரண்டம் பூநீர் இவைகளின் சுண்ணத்தை ஒர்நிறையாய் எருக்கம்பாலலாட்டி கட்டிக்குக் கவசஞ்செய்து காயவைத்து புரசம்பட்டை புளியம்பரணை நாயுருவிஇவைகளின் சாம்பல் வகைக்குப்படி-2, ஒருசட்டியிற்போட்டு அதற்குநடுவில்வைத்து மேர்சட்டி மூடிச் சீலைமண்செய்து நாலுசாமம் கமலாக்கினியாய் தென்னமட்டையாலெரிக்கப் பஸ்மமாகும், அதில்பணவிடையும் ரசபஸ்மம்பணவிடையுஞ்சேர்த்து அனுபானத்திலிட ஷ்டி வியாதிகள்தீரும்.

## துருசுபஸ்மம்.

துருசுக்கட்டியைக் கவுதும்பைச் சாற்றில் ஆறுசாமம் ஊரவைத்து ரவியிலுலர்த்தி அப்பாலந்தச்சாற்றால் ஒருசாம

மாட்டி பில்லைசெய்து காயவைத்து ஷை இலையை யரைத்து அதற்கு அங்கிபூட்டி ஏழுசீலைசெய்து கதுவாலிப்புடம்போட்டு கருஊமத்தஞ்சாற்றாலாட்டி பில்லைசெய்து காயவைத்து மேற்படியிலையையரைத்து அங்கிபூட்டி ஏழுசீலைசெய்துமுன் போற்புடம்போடநீறும் அதை யனுபானத்திலிட சுரம்கெண்டைசன்னி தோஷம் கட்டி அஷ்டகுன்மம் பக்கவாயு ஈளை இளைப்பு காசம் வயிற்றுப்பொருமல் பெருவயிறு வீக்கம் காமாலை பித்தம் சோகை பாண்டு விஷநீர்க்கோர்வை தீரும்மேற்படி பஸ்மத்தைச் சாறுவராத்தளைகளிடச் சாறுவரும்.

## தாம்பிரபஸ்மம்.

தாம்பிரசெந்தூரத்திற் சொல்லியபடி சுத்திசெய்ததாம்பிரம் வீரம் இரசம் சூடன் வெள்ளைநாரம் வகைக்குப் பலம்-1, பாஷாணப்பலம்-௨, இவைகளை வெள்ளெருக்கம் பால்விட்டு ஒருநாளாட்டி பில்லைசெய்துகாயவைத்து ஓட்டிவிட்டுச் சீலைசெய்து கெஜபுடம்போடபஸ்மமாகும் அதிற்பணவிடை அனுபானங்களிலிட பிரமேகம் மேகம் க்ஷயம் பவுத்திரம் சூலை- 8 குன்மம் வாயுவனை பித்தமுதலானவியாதிகள் தீரும்பத்தியம் ஆவின்பாலும் அன்னமுமகொள்ளவும்.

சுத்திசெய்ததாம்பிரம் விராகனிடை-12, சூதம் கெந்தி தாளகம் வகைக்கு விராகனிடை-8, இவைகளை வெள்ளெருக்கம்பாலாலாட்டி பில்லைசெய்து காயவைத்து ஓட்டிவிட்டுச் சீலைசெய்து கெசபுடம்போட்டு அப்பால் சத்திசாரணைச் சாற்றால் ஒருநாளாட்டி முன்போற்புடம்போட பஸ்மமாகும்அதில்பணவிடை தேனிற்கொள்ள குன்மம் வாயுகவுசி கெண்டை சூலை மூலந்தீரும்.

## வெள்ளிபஸ்மசெந்தூரம்.

சரிகைவெள்ளியை மேலசாய்த்தட்டி பழுக்கக்காய்ச்சி பஞூபாகற்கிழங்குச்சாற்றில் ஏழுதபா தோய்த்துக் குகையில் வைத்துஉருக்கிக் கண்விட்டாடும்போது மகிழம்பூச் சாற்றை சிறுகச்சிறுகவிட்டுஊதப் பொடியாய்ப்போகும் அதை மேற்

படி சார்றுலாட்டி பில்லைதட்டிக் காயவைத்து முக்காலேவளை வேரை மேற்படிசாற்றுலாட்டிக் குகைசெய்து வைத்து மூடி எழுசீலைமண்செய்து நூறெருவிற் புடம்போட நீறும் அதில் பணவிடை திப்பிலிலேகியத்தில்கொள்ள சிலேத்துமம் 96-ம், சூலையுந்தீரும், மேற்படி வெள்ளிபொடிக்குச் சமம் லிங்கம் சேர்த்து எருக்கம்பாலும் அரசம்பட்டை தாமரைக்கிழங்கு எலுமிச்சம்பழம் இவைகளின்சாற்றிலும் தனித்தனியே அரைத்து வகைக்கொருபுடம் முப்பதுயெருவில் போடச் செந்தூரமாகும் இதை மேற்படி வியாதிகட்கு உபயோகப்படுத்திக் கொள்ளவும்.

## பவளபஸ்மம்.

முயலெலும்பைச்சுட்டசாம்பல் பலம்-1, குமரிச்சாற்றுலாட்டி குகையும் மூடியுஞ்சேர்த்து பவளம்பலம்-1, கிராம்பு சடாமாஞ்சில் வீரம் வகைக்குக் கழஞ்சு-வ, இவைகளை மூடி இரத்தத்தாலாட்டிக் காயவைத்து மேற்படிகுகைக்குள் வைத்து எழுசீலைசெய்து ஐம்பதெருவில் புடம்போட நீறும் மேற்படிபற்பத்தைச் சீந்தில்சர்க்கரையில்கொள்ள சகலமேகமுந்தீரும்.

எலுமிச்சம்பழச்சாற்றில் பவளத்தை ஒருநாளூறவைத்துக் கழுவிப்போட்டு எருக்கம்பாலால்மூன்றுநாள் அரைத்து பில்லைசெய்து காயவைத்து முன்போல்புடம்போட நீறும்.

கீழ்க்காய்நெல்லியிலையை அரைத்துக் குகைசெய்து அதற்குள் பவளத்தைவைத்து எழுசீலைசெய்து முன்போல்புடம் போட பஸ்மமாகும் அதை யனுபானங்களில்விட சுரம் குளிர் சன்னி வயிற்றிரைச்சல் பித்தம் கல்புகைச்சல் விக்கல் வயிற்றுளைச்சல் ஈளை இருமல்தீரும்.

ஒருபலபவளத்தை ஒருநாள் தண்ணீரில் ஊறவைத்துக் கழுவிப்போட்டு தேட்கொடுக்கிலையை யரைத்துக் குகைபிடித்து அதற்குள் மேல்படிபவளத்தை வைத்துமூடி எழுசீலைசெய்து காயவைத்து முன்போல் புடம்போட்டெடுத்து பிங்கானிலிட்டு அதில் ஆவின்பால்விட்டு ரவியிற் காயவைத்து அப்பாலதை ஆலம்பழுப்பிற்கட்டி நெற்குழியில்மூன்றுநாட்

புதைத்தெடுத்து அனுபானங்களிலிட க்ஷயம் ஈளை மந்தாரக் காசம் சிரங்கு சொறி முதலான மேற்காட்டிய ரோகங்களெல்லாம் தீரும்.

ஒருபலம் பவளத்தை எலுமிச்சம்பழச்சாற்றிலிட்டு 1-நாள் ரவியில்வைத்துக் கழுவிப்போட்டு இலந்தையிலையையாவது தைவேளையிலையையாவது அரைத்துக் குகைசெய்து அதற்குள் வைத்துமூடி ஏழுசீலைசெய்து காயவைத்து முன்போற் புடமிட்டெடுத்து ஒரு பீங்கானியிட்டு ஆவின்பால் விட்டு ரவியிற்காயவைத்து தேன் ஆவிநெய்யிற்கொள்ள மேகச்சூடு காங்கை க்ஷயம் ஈளை இருமல் நீர்க்கடுப்பு நீங்கும்.

## நாகபஸ்மம்.

இலுப்பை நெய்யில் இருபதுதபா உருக்கிச் சாய்த்துச் சுத்திசெய்த $\frac{1}{2}$-பல நாகத்தைக் குகையி லிருக்கிக் கனவிட்டாடும்போது சிற்றாமணக்கிலையைக் கசக்கி 5-6-சொட்டுப்பிழியச் சத்தமிடும் மறுபடியும் 5-6-சொட்டுப்பிழிய சத்தமடங்கும் துருத்தியை விசையாய் ஊதி மறுபடியும் 5-6-சொட்டுப்பிழிந்து ஊதி வேறாகின்ட மல்லிகைப் பூப்போல் நீறும் அதை யனுபானங்களிலிட வெள்ளை வெட்டை சிலேத்துமம் குன்மம் மூலம் நீங்கும் தாதுவிர்த்தியுண்டாகும்.

சுத்திசெய்த நாகத்திடைக்குப் பாதி இரதஞ் சேர்த்துருக்கி வேலிப்பருத்திச் சாற்றாலரைத்து பில்லைதட்டிக் காயவைத்து அதற்குமேல் துத்தியிலையை யரைத்துக் கவசஞ்செய்து 7-சீலைமண்செய்து முழப்புடம்போட நீறும் இப்படி 3-புடம்போட்டு வெண்ணெயில் பத்தியமாய்க் கொள்ள ஊஷிவியாதிகள் தீரும்.

## கெருடபஸ்மம்.

கற்றாழஞ் சோற்றில் கடுக்காயைப் பொடித்துப் போட்டுப்பிசைந்து வைக்கத் தண்ணீராகும் அதில் கெருடக்கல்லைப்போட்டுக் கொதிக்கவைத்துக்கழுவி ஒட்டிலிட்டு அதற்குக் கீழுமேலும் ஆனையறுகங்கிழங்கை யிடித்த தூளைப்போட்டு

மூடிச் சீலைசெய்து கெஜபுடம்போட நீறும் வெண்ணெயிற் கொள்ள கடுப்பு எலும்புருக்கி அஸ்திசுரம் அஸ்திவெட்டை மேகவெட்டை தீரும் தேகங்குளிரும் விந்திறுகும்.

## வெள்வங்க பஸ்மம்.

புளியமடற் கிழங்கை அரைத்து எருமைத்தயிரிற் கலக்கி வங்கத்தை 10-தபா உருக்கிச் சாய்த்துச் சுத்திசெய்தது விராகனிடை-3, வாலைரசம் விராகனிடை-3, இவைகளை யொன்றாய்த் தொந்தித்து கற்பூரசிலாசத்து விராகனிடை-3, கூட்டிச் சுண்ணநீரா லிரண்டுசாமமாட்டி பில்லைதட்டிக் காயவைத்து ஓட்டிலிட்டுச் சீலைசெய்து 30-எருவிற் புடம்போட்டு மறுபடியும் ஷை நீராலாட்டி 3-4-புடம்போட நீறும் மாதுளம்பூ விதழை நிழலிலுலர்த்தி அதினிடை சீரகஞ்சேர்த்துச் சூரணித்துத் திரிகடிப் பிரமாணத்தில் பணவிடை பஸ்மம் வைத்து நாளொன்றுக் கிருநேரமாக மண்டலங்கொள்ள நவமூலம் மெய்நோய் மேகம் எலும்புருக்கி தீரும் நாடிவலுத்துத் தாதுண்டாகும் கரப்பன்பதார்த்தம் நீக்கவும்.

சுத்திசெய்த வெள்வங்கத்திற்குப்பாதி ரசஞ்சேர்த்துருக்கி கஞ்சாவிலைச் சாற்றாலாட்டி பில்லைசெய்து காயவைத்து அதற்கு ஷை இலையையரைத்துக் கவசஞ்செய்து ஓட்டிலிட்டுமூடி முன்போற் புடம்போட பஸ்மமாகும் அதை யனுபானங்களிலிட ஷை வியாதிகள் தீரும்.

## கருவங்கபஸ்மம்.

கருவங்கத்தைப் பிரண்டைச்சாற்றில் 10-தபாஉருக்கிச் சாய்த்துச் சுத்திசெய்தது பலம்-1, சட்டியிலிட்டு உருக்கி ஆடுதீண்டாப்பாளைவேரால் பஸ்மமாகும்வரை கிண்டி நிறுத்து அதற்குப்பாதி ரசஞ்சேர்த்து மூக்கரைச்சாரணைச்சாற்றால் 4-ஜாமமரைத்து 3-புடம்போட நீறும் அனுபானங்களிலிட மேகவியாதிகள் தீரும்.

கருவங்கத்திற்குப் பாதி ரசஞ்சேர்த்துருக்கி ஆலம்பாலால் மெழுகுபோ லரைத்து பில்லைதட்டிக்காயவைத்து மரு

தம்பட்டையும் உப்புஞ்சேர்த்து இடித்து பில்லைக்குக் கீழும் மேலும் போட்டுமூடிச் சீலைமண்செய்து 30-எருவில் புடம் போட்டு மூக்கறைச்சாரணைச் சாற்றாலரைத்து 3-புடம்போடத் தவளம்போல்நீறும் அனுபானங்களிலிட மேகமுதலான வியாதிகள் தீரும்.

## கர்ப்பூரசலாசத்துப் பஸ்மம்.

கர்ப்பூரசலாசத்தை ஆவின்பாலிற் போட்டுக் காய்ச்சிக் கழுவிச் சுத்திசெய்து சிறுசெருப்படைச் சாற்றால் 4 ஜாமமாட்டி லேசாய் பில்லைதட்டிக் காயவைத்து ஓட்டிலிட்டுச் சீலைசெய்து 50-எருவிற் புடம்போடவும் இந்தப்படி ஷை சாற்றாலாட்டி 3-புடம்போட்டு ஆவின்வெண்ணெயிற்கொள்ள மேலெரிவு பித்தவெட்டை நீர்க்கடுப்பு நீங்கும், ஷை பற்பத்திடை சுத்திசெய்த வெங்காரஞ்சேர்த்து சிறுநீராலாட்டி பில்லைசெய்து காயவைத்து ஓட்டிலிட்டுச் சீலைசெய்து 1-எருவிற் புடம்போட்டு வெண்ணெயிற் கொடுக்க நீர்க்கட்டு நீர்க்கடுப்பு தீரும்.

வெள்ளரிவிரை விராற்றலைக்கல் ஷை பற்பம் இவைகளையரைத்து ¼ படி வெள்ளரிக்காய்ச்சாற்றி லொருவேளையும் முள்ளங்கியை யிடித்துப் பிழிந்தசாற்றிலொருவேளையும்கொடுக்க கல்லடைப்புத் தீரும்.

## சொர்ன பஸ்மம்.

தங்கரேக்கை முள்ளிக்கீரைச் சாற்றில் 3-நாளூறவைத்து ரவியிற்காயவைத்துக் கல்வத்திலிட்டு சித்திரைப் பாலடைச் சாற்றில் மைப்போலரைத்து பில்லைதட்டிக் காயவைத்து அதற்கு கடாரிப்பிலையை யரைத்துக் கவசஞ்செய்து அகலில்வைத்து மூடி 7-சீலைமண்செய்து 100-எருவிற் புடம்போடப் பஸ்மமாகும், சவுரிபிலைச்சாறுபடி-8, சிறுகச்சிறுக ஒருசட்டியிலிட்டுக் காயவைத்துத் திரட்டி நிறுத்து அந்தவிடை ஆடாதோடை இலையும் 1-பலம் புனுகும் 2-கழஞ்சு ஷை பஸ்மமும் சேர்த்து மெழுகுபோலரைத்து நெல்லிக்காய்போல் உருட்டி எள்ளெண்ணெயிற்போட்டு அந்தி சந்தி ஒவ்வொரு

உருண்டை விதம் 6-மாதஞ் சாப்பிட்டு ௸ எண்ணெயை வாரத்துக் கிரண்டுமுறை ஸ்நானஞ்செய்து சையோகமும் கரப்பன்பதார்த்தமுந் தள்ளிவைக்க வெண்குஷ்ட முதலான சகல குஷ்டமுந் தீரும், கிராம்பை மயனமாய்ப் பொடித்து ஆவின்வெண்ணெயில் மத்தித்து அதில் பணவிடை தங்கபஸ்மம் வைத்துச் சாப்பிட்டு பாலும் அன்னமும் பொசித்துவர விந்தூறும் தாதுகட்டும் தேகம் பலக்கும்.

## முத்துப் பஸ்மம்.

முத்தைச் சங்கம்பழச்சாற்றில் 2-நா ளூறவைத்து முள்ளிப்பழச்சாற்றால் மெழுகுபோலரைத்து பில்லைசெய்து காய வைத்து ஓட்டிலிட்டுச் சீலைசெய்து 30-எருவிற் புடம்போட்டு தங்கபஸ்மத்துடன் சேர்த்துச் சாப்பிட தாதுகட்டும் மேக வியாதிகள் தீரும்.

## அயபஸ்ம செந்தூரம்.

4-பலம் சுத்திசெய்த அயத்தில் மாஞ்செவிக் கள்ளிப் பால்விட்டு ரவியில்வைக்க நீரும் அதை ஒதியம்பட்டைச் சாற்றால் 4-ஜாமமாட்டி 10-புடம்போட செந்தூரமாகும் அநுபானத்திலிட தேகம் இறுகும் விந்தூறும் தாதுகட்டும்.

## சிங்கிபஸ்மம்.

மான்கொம்பை நாலாய்ப்பிளந்து சிறுதுண்டுகளாய் நறுக்கி ஒருநாள் குப்பைமேனிச் சாற்றில் ஊறவைத்து ௸ யிலையை யரைத்துக் கவசஞ்செய்து காயவைத்து ஓட்டிற்பரப்பி மேலோடுமூடிச் சந்துவாய் சீலைமண்செய்து 50-எருவிற் புடம்போட்டெடுத்து ஆவின்பால்விட்டரைத்து பில்லை தட்டிக் காயவைத்து முன்போற் புடம்போட பஸ்மமாகும், அநுபானங்களில் ௸ பஸ்மத்துடன் பவளபஸ்மஞ் சேர்த்துக் கொடுக்க நீரடைப்பு, கல்லடைப்பு, சதையடைப்பு, நீரெரிவு, க்ஷயம், ஈளை, இருமல், உஷ்ணம், மேககாங்கை, தீரும்.

மான்கொம்பை இடித்து கோவைச் சாற்றில் ஒருநாளூறவைத்து மறுநாள் நன்றாய்க் காயவைத்து ஓட்டிலிட்டுச் சீலைசெய்து முன்போற் புடம்போட நீறும் அதை யனுபானங்களிலிட மேற்காட்டிய வியாதிகள் தீரும்.

## கல்நார் பஸ்மம்.

கல்நாரைச் சிறுதுண்டாய்ப் பிளந்து ஓட்டிலிட்டு அதற்குக்கீழு மேலும் கோங்கிலவம்பட்டையை இடித்துப்போட்டு அப்பால் ஷை பட்டைக்கஷாயம் விட்டரைத்து 3 புடம் போடத் தவளம்போல் நீறும் தேனிலாவது தூதுளை லேகியத்திலாவது கொள்ள சிலேத்மரோய் 96-ம் நீங்கும் மேககாங்கை தீரும், மேற்படி பற்பத்தைப் பல்விளக்கத் தந்தம் இறுகும்.

கல்நாரைச் சிறு துண்டுகளாய்வெட்டி ஓட்டில் வைத்து அதற்குக் கீழுமேலும் எருக்கம்வேரை யிடித்த தூதுளைபோட்டு மூடி கெஜபுடம்போட்டு மேற்படி பாலிலரைத்து 3-புடம்போட்டு அனுபானத்திலிட மேற்படி வியாதிகள் தீரும், தந்தம் இறுகும்.

## பஞ்சலவண பஸ்மம்.

பஞ்சலவணம் வகைக்குப் பலம்-¼, கல்வத்திலிட்டு பிரண்டை முருங்கைப்பட்டை குப்பைமேனி நொச்சி குமரி இலைவகளின்சாற்றால் வகைக்கு ஒருஜாமமரைத்து பில்லைதட்டிக்காயவைத்து ஓட்டிலிட்டுச் சீலைசெய்து 10 - எருவிற் புடம்போடப் பஸ்மமாகும், அதற்கு நாலிலொன்று பெருங்காயஞ் சேர்த்து தேன்விட்டு மெழுகுபோ லரைத்துச் சிமிளில் வைத்துக்கொண்டு வேளையொன்றுக்கொரு கழஞ்சிவீதம் வியாதியின் பலத்துக்குத் தகுந்தபடி ¼-மண்டலம் அல்லது ½-மண்டலங்கொள்ள வாதம், வாயு, குற்றல், குடைதல், வலிகடுப்பு, குன்மம், அண்டவாயு, கிரகணி, பவுத்திரம், ருத்திரவாயு, குடற்புரட்டல், வயிற்றுப் பொருமல், செரியாமை, மந்தம், மகோதரம், நீங்கும்.

# பஸ்மவகைபரணி

முற்றிற்று.

மேற்படி மூலிகை சமூலத்தையும் தண்ணீரில் வேகவைத்து வெதுப்பத்துடன் வாயில்விட்டுக் கொப்பளிக்க பல்வலி தீரும்.

---

சிவன்வேம்பு மூலத்தைப் பாலிற்கொள்ள தீராத சிலவிஷம் காலிற்காணும், பிளப்புகுஷ்டம், கரப்பன்வகைகள் வாயுதீரும்.

மேற்படி மூலிகை சமூலத்தையும் உலர்த்திச் சூரணஞ் செய்து சர்க்கரை கலந்து திரிகடிப் பிரமாணம் மண்டலங் கொள்ள, குஷ்டம்-18, பாதத்திலுண்டாகும் வெடிப்பு மேல் தடிப்பு படர்தாமரை அரிப்பு தேகத்தில் முள்ளுகொண்டு குத்துவதுபோல் குத்துதல் திமிர் தலைநோய் தீரும்

---

60-வருடம் சென்ற வேம்பின் வேர்பட்டை, கொழுந்து, பூ, பிஞ்சு, இவைகளை ஒர்நிறையாய் உலர்த்தி இடித்து திரிகடிப்பிரமாணம் ஒருமண்டலம் ஆவின்பால் நெய் தேனில் கொள்ள சகல நோய்களும் தீரும். தேகம் இறுகும், நரை திரை மாறும்.

மேற்படி தூளில் வாழைப்பழத்தைப் புதைத்து நாற்பது நாள் எடுக்க காயமிருக்கும் அதைத்தின்ன தேகம் சற்றாளுகும் கிழவன் வாலிபனாவான், தேகம் ஒருபோதும் தளராது.

---

செங்கத்தாரி, கருஞ்சூரை, செஞ்சூரை மூலத்தைப் பாலிற் கொள்ள கரப்பான், கரந்தி, செயயாப்புகட்டி, செங்கரப்பன், கொள்ளிக் கரப்பன் முதலான கரப்பன்களும் பல விஷங்களும் தீரும், மேற்படி பட்டையை அரைத்து உடம்பிற்பூச மஷ வியாதிகள் தீரும்.

---

தூதுவளையை ஆதித்தவாரத்தில் பிடித்துக்கொண்டு, சோடசகணபதி மூலமந்திரத்தை 100-உரு ஜெபித்து, சமூலம் பிடுங்கி உலர்த்தித் தூள்செய்து திரிகடிப் பிரமாணம் ஆவின்பாலிற்கொள்ள பித்தம் 40ம் தீரும், வெள்ளாட்டு நெய்யிற் கொள்ள கபம் தீரும், சிறுமணக் கெண்ணெயில் கொள்ள சரீரவரட்சி தீரும்.

ஷ்டி இலையைச் சமைத்துத்தின்ன பசியுண்டாம் ஷ்டி பூவை நெய்யில் வதக்கியுண்ண தாதுபுஷ்டியுண்டாம், ஷ்டி காயை இந்தப்படி சாப்பிட வாதபித்த சிலேத்மம் நீங்கும், ஷ்டி வேரை வெத்திலே பாக்குடன் தின்றுவர திரிதோஷம் நீங்கும், தூதுவளை சமூலம், பேய்ப்புடல், கரிப்பான், மிளகு சீரகம், ஜாதிக்காய், கிராம்பு, வால்மிளகு, இவைகளைச் சூரணித்துப் பிட்டவித்து நெல்லிக்குச்சியாற் கிண்டி ஆற்றி சர்க்கரையிற்கொள்ள, காந்தல் வீக்கம், சோகை தீரும்.

---

சித்தாமணக்கிலைச்சாறு வேப்பெண்ணெய் சமன்கலந்து பதமாய்க் காய்ச்சி வடித்து ஒரு மண்டலம் புளித்தள்ளிச் சாப்பிட கருங்குஷ்டம், வெண்குஷ்டம், சொரிகுஷ்டம், கிரந்தி, தழுதணை குறைநோய், பெருவியாதி, திமிர், கிரந்திப் புண் தீரும், ஆமணக்கெண்ணெய் பல அவுஷதங்களுக்கு ஆவதுமன்றி உடலிலுள்ள வெப்பையும், மூலச்சூட்டையும் நீக்கி, உடலை வளர்க்கும் மேற்படி பெண்ணெய், கற்றாழைச் சோற்றின்நீர் எருள்ளிச்சாறு எலுமிச்சம்பழச்சாறு வகைக்குப்படி மாகாணி ஒன்றாய்க்கலந்து அதில் ஒருவிராகனிடை வெந்தயத்தைப் பொடித்துப்போட்டு சாப்பிட விரேசனமாகும், மலக்கட்டுத் தீரும்.

மேற்படி யெண்ணெயில் கதலிவாழைப்பழம், பேரீச்சம் பழம், முந்திரிப்பழம், ஏலம், கிராம்பு, ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, குங்குமப்பூ, கோரோசனை, கற்கண்டு இவைகளைப் பொடித்துப்போட்டு ரவியில் வைத்துக்கொண்டு குழந்தைகளுக்குக் கொடுத்துவர கணை, பிரளி, மாந்தம், கரப்பன், தீரும், மேனி பருக்கும் பளபளப்பாகும்.

---

மூக்கரைச் சாரணைவேரை ஆவின்பாலிற்கொள்ள ஒரு மண்டலத்தில் நரை திரை மாறும் உடல் இறுகும் பகலில் நட்சத்திரம் கண்ணுக்குத்தோற்றும் குன்மம் 8-ம் தீரும்.

---

நிலவாகைச்சமூலத்தை இடித்து தூட்செய்து பேய்ச்சுரைக் குடுக்கையில் அடைத்துக்கொண்டு திரிகடிப்பிரமாணம்

ஆவின் நெய்யிற்கொள்ள உடம்பு பூரிக்கும், தேனில்கொள்ள உடம்புவற்றும், சிற்றாமணக் கெண்ணெயிற்கொள்ள எலிகடி விஷம் சில்லரை விஷகடியும், ஏப்பமும், வெந்நீரிற் கொள்ள கிரிமியும், பசுவின்மோரிற்கொள்ள செறிபாமையும், எருமை மோரில் எலிகடிவிஷமும், எருமைச்சாணிப்பாலில் பாண்டும், எருமைப்பாலில் பெண்கள் கைமசக்கும் தீரும்.

பாகலிலைச் சாற்றில் கொள்ள உடலில் தடிக்கும் செய்யான் விஷமும், மேனிச்சாற்றில் தேள்விஷமும், ஆலம்பழுப்புச்சாற்றில் பெருச்சாளிகடி விஷமும், வேம்பாடம்பட்டைச் சாற்றில் செவ்வெட்டைகடியும், செம்பறிஆட்டுநீரில் அரணை கடியும், வீழிச்சாற்றில் விரியன்கடியும், தேசிப்பழச்சாற்றில் சர்வவிஷமும், பாகலிலைச்சாற்றில் நட்டுவக்காலி விஷமும், அவுரியிலைச் சாற்றில் அரணை, வண்டுகடி, புடையன், குத்து, தவளை, குரங்கு, நாய், பிள்ளை, பேய்நாய், பேய்நரி, இவைகளின் விஷமும், கையாந்தகரை கண்டங்கத்திரிச் சாற்றில் ஈளை, க்ஷயமும், கொடிக்கள்ளிச் சாற்றில் மாரல் சுரமும், குளிர் சுரமும், நல்லெண்ணெயில் விக்கலும், வெள்ளாட்டு நீரில், குஷ்டம் சோகை காமாலையும், பசுவின் நீரில் கொள்ள சொறி சிரங்கு, உளைவு, பெருவயிறு, மகோதரம், நீராமையும் நீங்கும், புளி புகையிலை தள்ளவும்.

வெப்பாலை மூலத்தைப் பாலிற்கொள்ள குஷ்டம் சிலவிஷம் கரப்பன் வண்டுகடி முதலிய வியாதிகள் தீரும்.

குளப்பாலை மூலத்தை பாலிற்கொள்ள எலிகடி விஷம் விஷகரப்பன் உடல் சுரப்பு கால் சுரப்பு சருவவிஷ கடிவீக்கம் பருபடுவன் தீரும்.

முத்தருக்கஞ்செவி மூலத்தைப் பாலிற்கொள்ள முசவசிய முண்டாம் சிரியமூலை பருத்து விம்மும் கரப்பன் சிலவிஷம் சிலந்தி பருபிளவை புண் தீரும்.

ஆதளை மூலத்தை ஆவின்பாலிற் கொள்ள பதினெட்டு வகை எலிகடி விஷம் நீங்கும் பாலைக் கொப்புளிக்க வாய் வேக்காடு வெட்டை தீரும்.

பூவரசுமூலத்தைபாலிற்கொள்ள சொறி கிரந்தி கரப்பன் விஷகரப்பன வீக்கம் சிலவிஷம் தீரும்.

---

அறுகுமூலத்தைப் பாலிற்கொள்ள சகல விஷமும் தீரும், தேகபலமுண்டாகும், நரைதிரை மாறும், நரம்புகள் இறுகும், மூலச்சூடு வெட்டை நீர்க்கடுப்பு நீங்கும்.

மேற்படி மூலத்துடன் மிளகு, சீரகம், அதிமதுரம், மாதுளம்பூ இவைகளைக்கஷாயம்செய்து அதில் ஆவின்வெண்ணெய் போட்டுக் குடிக்க, மேஹ வியாதிகள் தீரும்.

---

அமுக்கிராக்கிழங்கை பாலிற்கொள்ள விந்து கட்டும், மேனிகாந்தியாகும் தேகத்திலுள்ள துர்நீர், கபம், சூலை, கரப்பன், பாண்டு, வெப்பு, வெட்டை, வீக்கம், கட்டி, பித்தக்கிருகிருப்பு நீங்கும்.

மேற்படி வேரை பாலில் அவித்துச் சுத்திசெய்து இடித்ததூள் விராகனிடை-64, இலவங்கம் விராகனிடை-1, சிறுநாகப்பூ விராகனிடை 2. மிளகு விராகனிடை-8, திப்பிலி விராகனிடை-11, இவைகளைச் சூரணித்து ஒன்றாய்க் கலந்து சரியிடை. சர்க்கரை சேர்த்துந் திரிகடிப் பிரமாணம் சாப்பிட்டுவர க்ஷயம், இருமல், புகைச்சல், அரோசிகம், தாதுநஷ்டம் தீரும்.

---

மரள்கிழங்கை பாலிற்கொள்ள மூலம், கரப்பன், புண் சிலந்தி, வண்டுகடி, எரிகுஷ்டம், தீரும்.

மேற்படி மரளை வாட்டிப்பிழிந்து சிசுக்களுக்குக் கொடுக்க நெஞ்சிற் கபக்கட்டு, கரப்பன், செங்கிரந்தி, கருங்கிரந்தி, தீரும்.

---

சரக்கொன்னை மூலத்தைப் பாலிற் கொள்ள வண்டுகடி, குஷ்டம், சொறி, தேமல், விஷநீர், வாதசூலை, வாதகரப்பன், தீரும்.

மேற்படி பூவையும், கொழுந்தையும், அரைத்து பாலிற் கொள்ள பிரமியம், வெட்டை, காமாலை, பாண்டு, பித்தம், விஷபாகவீக்கம், தீரும்.

மேற்படி பூவை எலுமிச்சம்பழச் சாற்றாலரைத்து உடம்பிற் றேய்த்துக் குளித்துவர சொறி கரப்பன் தேமல் பத்துத்தீரும்.

ஆவரைப் பஞ்சாங்கத்தைப் பாலில் ஒருமண்டலம்கொள்ள நீரழிவு பிரமேகம் ஆண்குறியெரிவு நீங்கும்.

ஷை பஞ்சாங்கத்தையும், வெந்தயத்தையும், சிவக்கவதக்கி கஷாயஞ்செய்து அதிற் கோரோஜனையை உரைத்துக் கொடுக்க இரத்தக்கடுப்புத் தீரும்.

ஷை வேர்ப்பட்டை கல்வத்திப்பட்டை மருதம்பட்டை சரக்கொண்ணைப்பட்டை இவைகளைக் கஷாயம் செய்து அதிற் கல்மதத்தை உரைத்துச் சாப்பிட நீரழிவு தீரும்.

காட்டாமணக்கு மூலத்தைப் பாலிற்கொள்ள குஷ்டம், பாண்டு. சோகை, காமாலை, வீக்கம், வயிற்றுக்கட்டி, பெருவயிறுதீரும் ஷை முத்தப்பருப்பை பாலிற்கொடுக்க விரோசனமாகும் கொடிக்கள்ளி மூலத்தைப் பாலிற்கொள்ள சோகை பாண்டு விஷபாகவீக்கம் செண்டை மகோதரம் வயிற்றுச்சூலை கரப்பன் எலிகடிவிஷந் தீரும் ஷை இளங்கொழுந்தை பிட்டவித்து பிழிந்தசார் படி அரைக்காலில் கொஞ்சம் மிளகுத்தூள்போட்டுக் கொடுக்க மேற்படி வியாதிகள் தீரும். பத்தியம் மோர் அன்னம் சாப்பிடவும் விரோசனமாகும்.

மிளகு மேற்படிகொழுந்து வெள்ளெருக்கப்பூ இம்மூன்றையும் வகைக்கு ஒருவிராகனிடைவீதம் சிதைத்துக்கொடுக்க குளிர்சுரம், சுரம், தீரும் மேற்படி மருந்துகளுடன் ஒரு களச்சிப்பருப்புச் சேர்த்துக்கொடுக்க அண்டவாயு தீரும்.

மாவிலிங்க மூலத்தைப் பாலிற்கொள்ள சுரம், வெட்டை, சூலை, சுரோணிதக்கட்டு, மந்தவாயு, குன்மம், அரையாப்பு, கண்டமாலை, புண், புரைகள், பிளவை. வீக்கம், வாதம், ஜன்னிருச்சை, கல்லடைப்பு, விஷகடி, தீரும்.

மேற்படி பட்டை மூங்கிலிலை சித்தரத்தை சுக்கு அரிசித்திப்பிலி சதகுப்பை கொடிவேலிவேர் இவைகளை ஓர்நிறையாய்ச் சிதைத்து ஒருபடி தண்ணீரில்போட்டு அரைக்கால்படியாய் வற்றவைத்து வேளை ஒன்றுக்கு மாகாணிப் படிவீதம் பனங் கருப்புக்கட்டிக்கூட்டி மூன்றுநாள் கொடுக்க பிரசவகாலத்தில் தடைப்பட்டிருக்கும் சூதகத்தை யுடைத்துவிடும்.

---

உகாய் மூலத்தைப் பாலிற்கொள்ள பலவகை வாயுக்கள், சூலைவாதம், குன்மம், கழலை, கட்டி, கண்டமாலை, அரையாப்பு, பிளவை, தொடைவாழை, விப்புருதி, வெட்டை, ஜன்னி, தோஷம், தீரும். ஷை இலை கழச்சிப்பருப்புக்கு அண்டவாயு தீரும்.

---

புரசு மூலத்தைப் பாலிற்கொள்ள எலிவிஷம், குன்மம், வாயு, வாதம், நீங்கும்.

ஷை விரையை எருமைச் சாணிக்குள் புதைத்துக் காலையில் 2-விரையை தோல்நீக்கி அரைத்து ஆவின்பாலிற்கொடுக்க வயிற்றிலுள்ளபெருங்கிருமிகள்விழும் அவைகளினாலுண்டாகும் வயிற்றுவலி தீரும்.

ஷை விரையை எலுமிச்சம்பழச்சாற்றி லுரசிப்போட பத்து நீங்கும்.

---

சுடுதரட்டி மூலத்தைப் பாலிற்கொள்ள புடைகிரந்தி, சூலை, அரையாப்பு, கண்டமாலை, கரப்பன், வாயு, சில்லரை விஷம், நீங்கும்.

---

ஷை இலைச்சாறும் நல்லெண்ணெயுங்கலந்து வேளையொன்றுக்கு மாகாணிப்படிவீதம் 3-நாள் புளித்தள்ளிச்சாப்பிட இரத்தவெட்டை தீரும்.

---

சடுக்காய் மூலத்தைப் பாலிற்கொள்ள கரப்பன், குஷ்டம், சிலவிஷம், கிரந்தி, வங்கு, தீரும்.

பெருவாகை மூலத்தை பாலிற் கொள்ள சூலைப்பிடிப்பு வீக்கம் சில்லரைவிஷம் கிரந்தி கரப்பன்தீரும்.

---

உசிலமூலத்தை பாலிற்கொள்ள சிலவிஷங்கள் மேகம் புண்கிரந்தி வண்டுகடி குஷ்டம் கால்கைபிடிப்பு சூலை தீரும்.

---

வக்கணத்திமூலத்தை பாலிற்கொள்ள கிரந்தி மேகம் கரப்பன் சிலவிஷம் வண்டுகடிதீரும்.

---

அளிசமூலத்தைப் பாலிற்கொள்ள சகலவிஷம் சுவாசகாசம் மந்தாரகாசம் வயிற்றுகிருமிகள் கரப்பன்கிரந்திதீரும்.

---

நெய்க்கொட்டான் மூலத்தைப் பாலிற்கொள்ள சகலவிஷகடிகள் கரப்பன் கிரந்தி மேகம் சூலைப்புண்தீரும்.

---

நவ்வல் மூலத்தைப் பாலிற்கொள்ள பெரும்பாடு வெட்டை மேகம் கழிச்சல் கிராணிதீரும், மேற்படி பழரசம் மேகநீரழிவை கேட்கும்.

---

அரசுமூலத்தைப் பாலிற்கொண்டாலும் அந்தமரப்பட்டையை அரிசியுடன் இடித்து மாவுசெய்து களிக்கிண்டித் தின்ன பெரும்பாடுதீரும்.

---

ஆலின்விழுதையும் மேற்படி விரையையும் பாலிற்கொள்ள பாலில்லாதபெண்களுக்குப்பாலுண்டாம் வெட்டைமேகம் உடல்எரிவு காந்தல்தீரும்.

---

ஆலவிரையையும் அரசவிரையையும் பாலிற்கொள்ள இரத்தங்கக்கல்நீங்கும்.

---

சந்தனமூலத்தைப் பாலிற்கொள்ள மேகம் பிரமியந்தீரும் அழகுண்டாம் மேற்படி வேரைக் கஷாயஞ்செய்து கற்கண்டுபோட்டுச்சாப்பிட மேற்படி வியாதிகள்தீரும்.

---

தேவதாரமூலத்தைப் பாலிற்கொள்ள பீனிசம் பழஞ்சுரம் நீரேற்றம்தீரும்.

---

அகில்மூலத்தைப் பாலிற்கொள்ள வாந்தி அரோசியம் சுரம்தீரும், இதன்புகையால் ஷை வியாதிகள்தீரும்.

---

சிறுகொண்ணைமூலத்தைப் பாலிற்கொள்ள கண்ணோய் உஷ்ணம் உள்மூலம்தீரும், தேகபலமும் அழகுமுண்டாம்.

---

நரிக்கொண்ணைமூலத்தைப் பாலிற்கொள்ள ஆனைச்சொறி கிருமிப்புடை அரிப்புப்புடை தீரும்.

---

மைக்கொண்ணைமூலத்தைப் பாலிற்கொள்ள குடல்வாதம் சூலை மேகந்தீரும்.

---

பிரமிசமூலத்தைப் பாலிற்கொள்ள கிரந்தி சூலை மேகம் வெட்டை குஷ்டம் வீக்கம் க்ஷயம் நீங்கும். பாட வல்லவமுண்டாம் நரைதிரைமாறும்.

---

வல்லாரைசமூலத்தைப் பாலிற்கொள்ள மருந்தீடுக்ஷயம் காசம் இருமல் ஈளை கைகாலில்உண்டாகும்ஊறல்நீங்கும் நெடுநாட்கொள்ள நரைதிரைமாறும்.

---

பொன்னங்காணிஎன்ற கொடுப்பைசமூலத்தைப் பாலிற்கொள்ள உடல்குளிரும் பகலில் நக்ஷத்திரம் கண்ணுக்குத் தோன்றும்.

---

கீழ்க்காய்நெல்லிசமூலத்தைப் பாலிற்கொள்ள சோகை காமாலை பாண்டு உடல்வெளுப்பு வாதபித்தரோகம் நீங்கும் இரத்தம்மிகும் கண்குளிரும் காயசித்தியாம்.

---

கருங்குருவைக்காடியில் ஷை சமூலச்சூரணத்தை நாட்பட பத்தியமாய்ச்சாப்பிட்டுவந்தால் நரைதிரைநீங்கி வாலிபவயதுண்டாம் உடலழியாது.

---

பொற்றலைகரிப்பான்சமூலத்தைப் பாலிற்கொள்ள இருமல் காசம் பாண்டு சோகை காமாலை கரப்பன் தீரும், மேற்படிமூலிகையை நாட்படகொண்டுவந்தால் நரைதிரைமாறும்.

மேற்படிசமூலம் அயக்கிட்டம் கடுக்காய் மிளகு சமனிடையாய்க் கஷாயஞ்செய்துசாப்பிட பாண்டு சோகை காமாலை தீரும்.

செங்கழுநீர்க்கிழங்கைப்பாலிற்கொள்ள உடல்குளிரும் விந்தூறும் நாட்படச்சாப்பிட்டால் எப்போதும் தேகத்தில் நோய்உண்டாகாது.

பற்பாடகம்சமூலத்தைப் பாலிற்கொள்ள வெட்டைமேகம் எரிவு காந்தல் அஸ்திகாங்கை வாயுபித்தம் தீரும்.

சதைஒட்டியிலையைப் பாலிற்கொள்ள ஷை வியாதிகள் தீரும் சீராசெங்கழுநீர் மூலத்துக்கும் ஷை வியாதிகள்தீரும்.

விஷ்ணுகரந்தை சமூலம் பாலிற்கொள்ள சுரம் மேகம் க்ஷயம் காசம் இருமல் ஈளை விஷங்கள் வாதபித்தம் தீரும், கண்ணுக்கு ஒளிவுண்டாம்.

ஷைசமூலச்சாற்றில் சித்தரத்தையை அரைத்துக் கலக்கி சுடவைத்துச்சாப்பிட ஷை வியாதிகள்தீரும்.

தண்ணீர்விட்டான்கிழங்கைப் பாலிற்கொள்ள விந்தூறும் சுக்குலப்பிரமியம்நீர்எரிவுகாந்தல்கரப்பன்வரட்சிதீரும்.

ஊமத்தின்வேறும்அதின்வித்தும் வகைக்குவிராகனிடை 1, வீதமாகஅரைத்து ஆவின்பாலிற்கலக்கி காலையில் மூன்று நாள்கொடுக்க எலிகடிவிஷமும் பேய்நாய் பேய்நரி கடிவிஷமும் குளிர்சுரமுந் தீரும்.

கற்றாழைச்சோறும் ஆவின்பாலும்கலந்துஉண்ண விந்துகட்டும் சொறி குஷ்டம் சோகை காமாலை தீரும், மூலச்சூடு தணியும் கண் குளிரும்.

மருதமூலத்தைப் பாலிற்கொள்ள நீரழிவு பிரமேகம் மயக்கம் தாகம் சுரதாபம் குஷ்டம் கிருமி வயிற்றுவலி வாட் சூலை தீரும்.

வேங்கைமூலத்தைப் பாலிற்கொள்ள குத்திருமல் இருமல் ஈளை உளமாந்தை புண் சிவடிதல் மலக்கட்டு நீங்கும். கண்ணுக்கு ஒளிவுண்டாம்.

வன்னிமர மூலத்தைப் பாலிற்கொள்ள வாதம் சன்னி தோஷம் காணாக்கடிவிஷம் கபம் சொறிநீங்கும்.

இருவாச்சிமூலத்தைப் பாலிற்கொள்ள கண்ணுக்குஒளிவும் தேகத்துக்கு அழகுமுண்டாகும் வலி மூர்ச்சைதீரும்.

காட்டாத்திமூலத்தைப் பாலிற்கொள்ள அதிசாரம் மந்தம் காசம் விஷம்தீரும்.

பெருங்குமிள்மூலத்தைப் பாலிற்கொள்ள மேகயெரிவு சுக்கிலக்கடுப்பு பித்தசுரம் வாதசுரம் திரிதோஷம்நீங்கும்.

கடலிராஞ்சிமூலத்தைப் பாலிற்கொள்ள மதுமேகம்மேகவாயு மேகவாதநீர் பித்தநீர் கபநீர் தொந்தநீர் மேகசுரம் பேதி சீதக்கடுப்பு பிரமேகம்தீரும்.

பூதவிருக்ஷமூலத்தைப் பாலிற்கொள்ள பலவிஷகடிகள் வாதரோய்கள் ஜன்னிதீரும்.

வாகைமூலத்தைப் பாலிற்கொள்ள பெருவிஷம் சிறுவிஷக்கடி அனல் விரணம் வாதரட்சி தாகசுரம் நாக்குஅட்சரம்தீரும்.

கருவாகைமூலத்தைப் பாலிற்கொள்ள விரணம் சுரம் வாயு கிருமி கபம்தீரும்.

இலவமூலத்தைப் பாலிற்கொள்ள நீர்க்கடுப்பு எரிவுவெள்ளைவிழுதல் மேகந்தீரும், விந்தூறும்.

விளாமூலத்தைப் பாலிற்கொள்ள காசசுவாசம் அரோசியம் தாகம் பித்தம்நீங்கும்.

கருநெல்லிமூலத்தைப் பாலிற்கொள்ள ஜன்னி வாதம் மயக்கம் தேகக்கடுப்புத்தீரும், நாட்படக்கொள்ளக் காயசித்தியாகும்.

மலைவேம்பின்மூலத்தைப் பாலிற்கொள்ள மலட்டுக்கிருமி இரத்தகுன்மம் உடலில் ஓடி ஒடிக்குத்துகின்றவாயுதீரும்.

சக்கரைவேம்பின்மூலத்தைப் பாலிற்கொள்ள காயசித்தியுண்டாகும் சுக்குலசுரோணித சித்தியுண்டாகும் கபரோகம் நீங்கும்.

கோங்கிலவின்பூவைப் பாலிற்கொள்ள நரை திரைமாறும் கொடியவியாதிகள்தீரும் மேனிபொன்போலாகும்.

நெல்லிக்காயைப் பாலிற்கொள்ள பித்தம் அனல் கபம் பீனிசம் வாய்நீர்ஊறல் வாந்தி மயக்கம் வெட்டை பிரமேகம் மலக்கட்டுநீங்கும், நாட்படக்கொண்டால் நரைதிரைமாறும்.

ஷை இலையை காடிவிட்டிடித்துப் பிழிந்தசாறு அரைக்கால்படிகொள்ள நன்ருய் விரோசனமாகும் பித்தநீர் கீழ்நோக்கும்.

எட்டிவித்தைப் பாலிற்கொள்ள தேள் நட்டுவக்காலிவிஷமும் மற்றவிஷங்களும்தீரும், குஷ்டம் கைகருப்பு வாதம் தாதுநஷ்டம்நீங்கும், பித்தம் அதிகரிக்கும், சிலந்தி மரத்தக்கட்டி நீர்க்கட்டி புண்புடைகளில் மேற்படிவித்தை அரைத்து பூசத்தீரும்.

கடம்புவிரையைப் பாலிற்கொள்ள விஷகடிநோய் குஷ்டம் இருமல் இளைப்பு எலிகடிவிஷம் சிரசிலுள்ளநீர் வாதம் தீரும்.

ஷ விரையை வெந்நீரில் அரைத்துக்கொடுக்க மல ஜல அடைப்பு வயிற்றுப்பொருமல்நீங்கும்.

அரசம்வித்தைப் பாலிற்கொள்ள மேகம் நீர்க்கடுப்புத் தீரும், பெண்களுக்குக் கருப்பமுண்டாம்.

அத்திவிரையைப் பாலிற்கொள்ள நீர்க்கடுப்பு மூத்திரக் கிருச்சரம் எலும்புருக்கி தசையுருக்கி மூலக்கொதிப்பு விந்திலுள்ளதோஷம்நீங்கும்.

கல்லத்திவித்தைப் பாலிற்கொள்ள மேகம் வெட்டை விந்திலுள்ளதோஷம் இரத்தபித்தகாசம் நீங்கும்.

தேத்தாவிதையைப் பாலிற்கொள்ள பித்தகாசம்க்ஷயம் ஈளை இருமல் மேகம் பிரமியம் உந்திப்புண் கிருச்சரம் கண்ணெரிவு தேகக்கடுப்புநீங்கும், தீபனமுண்டாம்.

நத்தைச்சூரிவித்தைப் பாலிற்கொள்ள விந்துகட்டும்தேகபலமுண்டாம்.

மாங்கொட்டைப்பருப்பைப் பாலிற்கொள்ள சீதம் இரத்தக்கடுப்பு மூலக்கொதிப்புத்தீரும்.

ஷ பருப்பு கருவேப்பிலை சுண்டைவத்தல் இவைகளைப்பொடித்து பசுவின்வெண்ணெயிலாவது தயிரிலாவது கொள்ள மேற்படிவியாதிகள்தீரும்.

புளியவித்தின் மேற்தொலியைப் பாலிற்கொள்ள சுக்குலமேகம் அதிசாரம் உந்திப்புண் நீர்க்கடுப்பு வெட்டை தீரும்.

மகிளவித்தைப் பாலிற்கொள்ள தாதுவிர்த்தி யுண்டாம் வெப்பு விஷம் மலக்கட்டு நீங்கும்.

தில்லைவித்தைப் பாலிற்கொள்ள சிறுவிஷம் பெருவிஷம் திமிர்வாயு கபம் குஷ்டம்தீரும்.

ஆளிவித்தைப் பாலிற்கொள்ள வீக்கம் வாந்தி வலி வாயு நரம்புக்குத்தல் அழலை அரோசியம் ஒக்காளம்விரைவாதம் நீங்கும். ஷெவிரையை முலைப்பால்விட்டரைத்து வெண்ணெயில்மத்தித்து சிலந்திவீக்கத்தில்பூச வற்றும்.

முருங்கைவித்தைப் பாலிற்கொள்ள விந்துகட்டும்.

பூனைக்காலிவித்தைப் பாலிற்கொள்ள விந்துகட்டும்,இரத்தக்கழிச்சல் கரப்பன் தீரும்.

உருத்திராக்ஷத்தை முலைப்பாலிற் கொடுக்க தாகம் திரிதோஷம் விக்கல் பித்தம்தீரும்.

மாதுளம்வித்தைப் பாலிற்கொள்ள மேகக்கடுப்பு சுக்குலதோஷம்நீங்கும் விந்துகட்டும்.

கொட்டைமுந்திரிபருப்பைப் பாலிற்கொள்ள இந்திரிய புஷ்டியுண்டாம். ஷெபருப்பு, வாதம்பருப்பு, இருப்பவல் இம்மூன்றையும் சமமாய் பாலில்விட்டரைத்துக் கற்கண்டு, சீனி, நெய், தேன்விட்டு லேகியஞ்செய்துசாப்பிட்டுவர விந்தூறும் போகம் மிகும்.

வாதம்பருப்பைப் பாலிற்கொள்ள போகம் மிகும், ஷெதயிலத்தால் கண்படலம்தீரும்.

கழல்காய்வித்துப் பருப்பை பாலிற்கொள்ள அண்டவாதம் பக்கசூலை குன்மவாயுதீரும். ஷ பருப்பும் தேங்காயுந்தின்ன ஷ வியாதிகள்தீரும் ஷ பருப்பும் வெள்ளுகாயிலையும் அரைத்துத்தின்ன ஷ வியாதிகள்தீரும். ஷ பருப்பை முட்டையில் பொரித்துத்தின்ன ஷ வியாதிகள்தீரும்.

நெருஞ்சிக்காயைப் பாலிற்கொள்ள வெட்டை எனும்புருக்கி நீர்க்கட்டு சதையடைப்பு நீர்ச்சிறப்பு நீங்கும்.

சல்வரிசியைப் பாலிற்கொள்ள அஸ்திமேகம் சீழ்மேகம் இரத்தமேகம்தீரும் தாதுவிர்த்தியாகும்.

மூங்கில்வித்தைப் பாலிற்கொள்ள இரத்தபித்தம் சுரம் கண்ணோய்தீரும்.

திப்பிலிஅரிசியைப் பாலிற்கொள்ள சிலேத்துமம் கபம் வயிற்றுப்பிசம் மேகம் வாதசுரம் கபசுரம் தீரும் தாதுவிருத்தியுண்டாகும்.

சாரப்பருப்பு ஜாலமிசறி இவைகளைத் தனித்தனி பாலிற்கொள்ள விந்துகட்டும்,வெள்ளைவிழுதல் நீர்க்கடுப்புநீங்கும்.

தூத்திவிரையைப் பாலிற்கொள்ள கைகாலிற் படருகிற கருமேகம் குஷ்டம் வெப்பு அகலும்.

நீர்முள்ளிவித்தைப் பாலிற்கொள்ள மேகம் அதிசாரம் நீர்வீக்கம் இளைப்பு இருமல்தீரும், விந்தூறும் இரத்தவிருத்தியாகும்.

# ஆறுங்காண்டம்

## முற்றிற்று.

இனி ஏழாம்பாகம்.